பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 09 செவ்வாய்க்கிழமை (22.04.2003) தொலைபேசி- 2223378 ஒலி 124

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## அரசின் போக்கில் அதிருப்தி

# சமாதானப் பேச்சுக்களை புலிகள் இடைநிறுத்தினர்!

## அன்ரன் பாலசிங்கம் பிரதமருக்குக் கடிதம்



(லண்டன்)

**சமாதானப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அரசு சரியான முறையில் நடைமுறைப்படுத்தத் தவறியமைக்கு ஆழமான அதிருப்தியை வெளிப்படுத்தும் முகமாக சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்வதை விடுதலைப்புலிகள் இடைநிறுத்தியுள்ளதாக சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தலைமை தாங்கும் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

### சமாதானத்தின் மீது மக்கள் சந்தேகம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் இந்த முடிவானது போர்நிறுத்த உடன்படிக்கையின் நியமங்களின்படி, இயல்பு நிலையை தோற்றுவிப்பதில் இழுத்தடிப்பு இல்லாத அமுலாக்கத்தை நிறைவேற்றாததின் மூலம், சமாதானத்தின் மீதுள்ள நம்பிக்கையை ஸ்ரீலங்கா அரசு உறுதிப்படுத்த தவறி

(10ம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தை திருத்தி அமைக்க வேண்டும்

## மூதூரில் இளைஞன் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

மூதூரில் குளத்தில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நேற்று நண்பகல் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மூதூர் பாலத்தோப்பில் அமைந்துள்ள பண்ணாந்துக் குளத்தில் குளிப்பதற்காக நான்கு இளைஞர்கள்



## பிரதமர் ரணில் திருமலைக்கு விஜயம்

(திருகோணமலை)

மூதூரில் அண்மையில் இடம் பெற்ற சம்பவம் குறித்து ஆராய்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இன்று திருகோணமலைக்கு செல்கிறார்.

அங்கு செல்லும் பிரதமர் அமைச்

## மூதூரில் இளைஞன் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

மூதூரில் குளத்தில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நேற்று நண்பகல் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மூதூர் பாலத்தோப்பில் அமைந்துள்ள பண்ணாந்துக் குளத்தில் குளிப்பதற்காக நான்கு இளைஞர்கள் சென்ற வேளையில் இச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தின்போது மற்றைய இளைஞர்கள் எவ்வித காயமும் இன்றி தப்பியுள்ளதாக திருகோண

(10ம் பக்கம் பார்க்க)

ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மக்கள் சந்தேகம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் இந்த முடிவானது போர்நிறுத்த உடன்படிக்கையின் நியமங்களின்படி,

நிறைவேற்றாததின் மூலம், சமாதானத்தின் மீதுள்ள நம்பிக்கையை ஸ்ரீலங்கா அரசு உறுதிப்படுத்த தவறி

(10ம் பக்கம் பார்க்க)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தை திருத்தி அமைக்க வேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் வேண்டுகோள்

(திருகோணமலை)

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது இணக்கப்பாடு காணப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படாமை மற்றும் மூதூர்ப் பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் என்பன காரணமாகவே இவ்வாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மூதூர் சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்காக திருகோணமலை

(10ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில் திருமலைக்கு விஜயம்

(திருகோணமலை)

மூதூரில் அண்மையில் இடம் பெற்ற சம்பவம் குறித்து ஆராய்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இன்று திருகோணமலைக்கு செல்கிறார்.

அங்கு செல்லும் பிரதமர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் உட்பட பல பிரதிநிதிகளைச் சந்தித்து நிலைமைகளை கேட்டறியவுள்ளார். இரு தரப்பினருக்குமிடையே மோதல் ஏற்பட்டதை அடுத்து மூதூரில் நெருக்கடி நிலை உருவானது தெரிந்ததே.

(ந-5)

## பிரி. முன்னாள் படைத்தளபதி வவுனியாவுக்கு விஜயம்

(வவுனியா)

பிரித்தானிய இராணுவத்தின் முன்னாள் தளபதி ஜெனரல் மைக்கல் ரோஸ் நேற்று காலை வவுனியாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

விசேட உலங்குவானூர்தி மூலம் நேற்றுக் காலை 9மணிக்கு வவுனியாவிற்கு விஜயம் செய்த ஜெனரல் மைக்கல் ரோஸ் வவுனியா இராணுவக் கட்டளைத்தளபதி, மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலா, வவுனியா

(10ம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்களை பின்போடும் தீர்மானம் எதுவும் இல்லை

## சமாதான செயலக பணிப்பாளர் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் சமாதான பேச்சுவார்த்தையில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையைப் பின்போடுவது பற்றி எதுவித தீர்மானமும் எடுக்கவில்லை என அரசாங்கச் சமாதானச் செயலகம் அறிவித்துள்ளது.

தாய்லாந்தில் எதிர்வரும் 29ம்

(10ம் பக்கம் பார்க்க)

# புலிகள்-முஸ்லிம் மதத் தலைவர்கள் திருமலையில் நேற்று சந்தித்தனர்

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் மூதூர்ப் பிரதேச முஸ்லிம் மதப் பிரதிநிதிகளுக்கும் இடையில் திருகோணமலை மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நேற்று கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

✠ தமிழ், முஸ்லிம் மக்கள் அச்சம், பீதி, சந்தேகம் இன்றி ஒருமித்து வாழ்வதற்கும் பரஸ்பரம் நம்பிக்கையை கட்டி எழுப்புவதற்கும் சகல முயற்சிகளையும் மேற்கொள்வது.

✠ மேற்குறிப்பிட்ட இலக்கை அடைவதற்காகவும், தொடர்ந்து நிறைவேற்றுவதற்காகவும் இரு சாராரும் நெருங்கிய தொடர்பை பேணுவது.

✠ தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சகல விதமான வன்முறைகளையும் நிறுத்திக்கொள்வதுடன் சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கு அவர்களை வேண்டிக் கொள்வது.

(10ம் பக்கம் பார்க்க)

## ஆசிய பிராந்தியத்தில்

# தேசிய வீரர்களில் ஒருவராக பிரதமர் ரணில் தெரிவு!

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் பிரசித்தி பெற்ற ரைம்ஸ் பத்திரிகை கணித்துள்ள ஆசிய பிராந்திய தேசிய வீரர்கள் பட்டியலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நாட்டின் ஜனாதிபதி மற்றும் ஏனைய தரப்பினர்களுக்கு முகம் கொடுத்து சமாதான நடவடிக்கைகளை விடுதலைப்புலிகளுடன் முன்னெடுத்துச் செல்வதாலேயே பிரதமரை இப் பத்திரிகை தேர்ந்தெடுத்துள்ளது.

(ந-5)

# கடற்புலிகளை இலங்கை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் - க. கா.குழு

(கொழும்பு)

கடற்புலிகளை விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ அமைப்பொன்றாக அரசாங்கம் அங்கீகரிப்பதுடன், கடலின் குறிப்பிட்ட பரப்பை கடற்புலிகளின் பயிற்சி நடவடிக்கைகளுக்கான இடப்பரப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரேரணையை முன்வைத்துள்ளது. இப்பிரேரணையை கண்காணிப்புக்குழுவின் தலைவர் ட்றிக்வி ரெலிப்சென் ஏப்ரல் 3ஆம் திகதி அரசாங்கத்தின் சமாதான செயலகத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இதுதொடர்பான விரிவான கலந்துரையாடல் எதிர்வரும் வியாழக்கிழமை ஓமந்தையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. அரச தூதுக்குழுவுக்கு பாதுகாப்பு செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமை தாங்குவார்.

இதற்கான தீர்மானம் கடந்த மாதம் யப்பானின் ஹக்கோன் நகரில் நடைபெற்ற ஆறாவது சுற்று சமாதான பேச்சுக்களின்போது எடுக்கப்பட்டிருந்தது. போர்நிறுத்தத்தின் உறுதிப்பாட்டை அச்சுறுத்தக்கூடிய கடற்சம்பவங்களை எதிர்காலத்தில் நடைபெறவிடாது தடுப்பது பற்றி அங்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

ஏனைய பிரேரணைகளாக இருதரப்பினரதும் கடற்கலங்கள் தேவையேற்படின் சர்வதேச கடற்போக்குவரத்திற்கான பதினாறாம் அலைவரிசை மூலம் முக்கிய தகவல்களை பரிமாறிக் கொள்ள இடமளித்தல், எந்தவொரு தரப்பினதும் கடற்கலம் மறுதரப்பின் கலத்திலிருந்து ஒரு கடல் மைல் தூரத்தை இடைவெளியாகப் பேணுதல், கடலில் ஏதேனும் ஒரு சம்பவம் நிகழ்ந்தால் துணை தேடும் விதத்தில் வேறு கலங்களை அவ்விடத்தில் சேர்ப்பதைத் தவிர்த்தல், இராணுவப் பாவனைக்குரியதல்லாத பொருட்களை எடுத்துச்செல்வதற்கு பாதுகாப்பான கடல்வழிகளை அமைக்கும் சாத்தியக்கூறுகளை ஆராய்தல் என்பவை குறிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் இப்பிரேரணைகள் நிராகரிக்கப்படலாம் என்று கடற்படைத் தளபதியை மேற்கோள் காட்டி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

(பி)

# கண்காணிப்புக்குழுவின் யோசனையை கடற்படைத் தளபதி நிராகரிப்பு

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்படிக்கையை அச்சுறுத்தக்கூடிய கடற்சம்பவங்களை எதிர்காலத்தில் நடைபெறவிடாது தடுப்பதற்கு போர்நிறுத்த கண்காணிப்புக்குழு முன்வைத்த யோசனைகளுக்கான பதிலை அரசாங்கம் சமர்ப்பித்துள்ளதுடன், புலிகளின் யோசனைகள் எதிர்பார்க்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

எதிர்வரும் 24ஆம் திகதி ஓமந்தையில் கண்காணிப்புக்குழு தலைமையில் இருதரப்பினரும் நேரில் உரையாடி இது பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி கண்காணிப்புக் குழுவின் இதுகுறித்த பிரேரணைகளை நிராகரித்துள்ளதாகவும் இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுக்கு தெரிவித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

போர்நிறுத்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்ட வேளையில், கடற்படையே கடலில் முழுமையான கட்டுப்பாட்டை வைத்திருக்கும் என்றும், அதுவே சட்ட அங்கீகாரம் பெற்ற ஒரேயொரு கடற்படையாக இருக்கும் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

சமஷ்டி ஆட்சி முறையே ஏற்படுத்தப்பட்டாலும் இதுவே நிலையாக இருக்கும் என்றும் கடற்படை தளபதி அபிப்பிராயம் தெரிவித்ததாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பான அரசின் நிலைப்பாடு வியாழன்று நடைபெறவுள்ள ஓமந்தை கூட்டத்தில் தெரிவிக்கப்படும் என்று பாதுகாப்புச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கடற்புலிகள் உத்தியோகபூர்வமான அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டு கடலில் குறிப்பிட்ட பரப்பு கடற்புலிகளின் பயிற்சி நடவடிக்கைகளுக்கு விடப்பட வேண்டுமென்றும், கடற்படையோ, கடற்புலிகளோ கடலில் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடலாகாது என்றும், இருதரப்பினரின் கடற்கலங்களுக்குமிடையே குறைந்தபட்சம் ஒரு கடல் மைல் இடைவெளி பேணப்படவேண்டும் என்றும் கண்காணிப்புக்குழு தனது பிரேரணைகளை சமர்ப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(உ)

## நிதி மோசடி புரிந்த பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு நாளை வரை விளக்க மறியல்

(கொழும்பு)

மத்திய மாகாண பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆனந்தமுனசிங்க நாளை புதன்கிழமை வரை விளக்க மறியல் வைக்கப்பட்டுள்ளார்.

மத்திய மாகாணகல்வித் திணைக்களத்தில் இடம்பெற்ற 10 கோடி ரூபா மோசடியில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கண்டிப் பிரதம நீதிவான் லியோன் செனிவிரட்ண முன்னிலையில் நேற்று முன்தினம் இரவு குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் இவரை ஆஜர் செய்தனர்.

இதேவேளை, இந்நிதி மோசடியில் இவர் ஈடுபட்டதற்கான நேரடி ஆதாரங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கு கருத்தரங்குகள், விரிவுரைகள் என்பவற்றை நடத்தும் போர்வையில் இடம்மோசடியைச் செய்துள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (உ-8)

## பூங்கா திறப்பு

(கொழும்பு)

காலி ஹியாரை இயற்கைப்பூங்கா பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் உபயோகத்திற்காக அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இப்பூங்காவில் காட்டுமிருகங்கள், அதிசயப் பறவைகள், அழகிய வண்ணத்துப் பூச்சிகள், பல்வேறு வகையான பாம்புகள், மருத்துவ மூலிகைகள், செடிகள், ப[illegible]ரிய பழமைவாய்ந்த மரங்கள் என்பன காணப்படுகின்றமையால் பாடசாலை மாணவர்களுக்கு பெரும் பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, மேற்படி பூங்கா இதுவரை பொதுமக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

## டிப்ளோமா பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்விநிறுவகத்தால் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா முதல் ஆண்டு பரீட்சை கால வரையறை இன்றி ஒத்திவைக்கப்பட்டதாக மேற்படி நிறுவகம் தெரிவித்துள்ளது.

19,20ஆம் திகதிகளில் இடம் பெறவிருந்த பரீட்சை ஒத்திவைக்கப்பட்டமைக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை, 2ஆம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சை ஏற்கனவே நடைபெற்று முடிந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## மாகாண மட்ட மரதன் ஓட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்குமாகாண மட்ட சைக்கிள் ஓட்டம் மற்றும் மரதன் ஓட்டப்போட்டிகள் எதிர்வரும் 27ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 18 வீர, வீராங்கனைகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

மாகாண மட்ட பெண்களுக்கான கூடைப்பந்தாட்டம் மற்றும் ஆண்களுக்கான எல்லே போட்டி என்பன மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் மே மாதம் 3, 4 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. (உ-7)

# சிரான் உபகுழுவில் விரைவில் மாற்றம்

(கிளிநொச்சி)

வடக்குகிழக்கின் உடனடி மனிதாபிமான தேவைகள் மறறும் புனர்வாழ்வு, புனரமைப்பு குறித்த திட்டங்களை ஆராய்வதற்கான கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் - அரசாங்கம் மற்றும் தொண்டர்நிறுவனங்களை சேர்ந்த 21 பேர் கொண்ட உபகுழுவில் அங்கம் வகிக்கும் பிரதிநிதிகளில் சில மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், அரசாங்கத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேர்ணாட் குணதிலக, நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், யப்பானியத் தூதுவர் ஒட்சுகா, கிளிநொச்சி சிரான் அலுவலகப் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கவை.

(உ-10)

# அரசியல் விவகாரக் குழு சனியன்று ஜேர்மன் செல்கிறது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக் குழு கல்விச் சுற்றுப் பயணமாக எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை சுவிஸ் உட்பட ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணமாகவுள்ளது.

சமாதானச் செயலகத்தின் ஏற்பாட்டில், எதிர்வரும் 26 ஆம் திகதி ஜேர்மனி செல்லும் இக்குழு தொடர்ந்து பெல்ஜியம், சுவிஸ், ஸ்பானிய ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்து அந்த நாடுகளின் விசேட அரசியல் நடைமுறைகள், சமஷ்டி ஆட்சி முறை குறித்தான விளக்கங்களை பெறுவதுடன் அவை தொடர்பில் ஆய்வுகளையும் மேற்கொள்ளவுள்ளது.

தமிழீழத்தில் நீண்டகாலமாக அரசியல் கடமைகளில் ஈடுபட்ட பெண்கள் உள்ளிட்ட 16 போராளிகளும் சுவிஸ், கனடா, நோர்வே, பிரித்தானியா நாடுகளில் விடுதலைப்புலிகளுக்காக நீண்டகாலமாக பணியாற்றிய ஐவருமாக 21 பேர் கொண்ட இந்த அரசியல் விவகாரக் குழு இம்மாத முற்பகுதியில் ஸ்கண்டிநேவிய நாடுகளான நோர்வே, சுவிடன், பின்லாந்து, டென்மார்க் ஆகியவற்றுக்கு பயணம் செய்து இம்மாதம் 13ம் திகதி நாடுதிரும்பியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)





யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் மகளிர் குழு நடாத்திய சர்வதேச மகளிர் தின விழாவில் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத் துறை விரிவுரையாளர் திருமதி சாந்திகுமாரி விக்னராஜா, சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசா ஆகியோர் உரையாற்றுவதையும் விழாவில் கலந்து கொண்ட மகளிரின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# யுத்தம் தொடங்கி ஒரு மாதமாகியும் பேரழிவு ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை

## அமெரிக்கப் பிரசாரம் பொய்யாய்ப் போனதா?

(பக்தாத்)

**ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சியாளர்களால் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட்ட பேரழிவு ஆயுதங்களையோ அன்றில் அவை தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட ஆய்வு கூடங்களையோ இது வரைக் கும் கூட்டணிப்படையினரால் கண்டு பிடிக்க முடியாமல் போயிருப்பது அமெரிக்க அதிகாரிகளுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.**

ஈராக்கில் கூட்டணிப்படைகள் வீடு வீடாகவும் கட்டடத்துக்குக் கட்டடமாகவும் பெரும் எடுப்பில் தேடுதல் நடத்தியிருந்த போதிலும் பேரழிவு ஆயுதங்களை அவர்களால் கண்டு பிடிக்க முடியாமல்போயிருப்பது அமெரிக்காவுக்கும் அதன் நேச நாடுகளுக்கும்“மூக்குடைபட்ட” நிலையைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த பெப்ரவரியில் ஐ.நா பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா சமர்ப்பித்த அறிக்கையில் ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதற்கான சான்றுகள் விண்வெளிக்கலங்கள் மூலம் பெறப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவை பற்றிய எந்த வித தடயமும் இப்பொழுது கூட்டணிப்படைகளால் கண்டு பிடிக்க முடியாமல் போயிருக்கிறது.

மேலும் எவ்வாறாயினும் பேரழிவு ஆயுதங்கள் தொடர்பான ஆதாரங்களை எங்காகிலும் கண்டு பிடித்து விட வேண்டும் என்ற முயற்சியில் கூட்டணிப்படைகள் ஈடுபட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ஈராக் மீதான யுத்தம் தொடரப்படுவதற்கு சதாம் ஹுசைன் பேரழிவு ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கிறார் என்பதே முக்கிய காரணமாகக் கூறப்பட்டு வந்தது. சதாமின் பேரழிவு ஆயுதங்கள் உலகத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் அவை அழிக்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்கத் தலைவர்கள் கூறி வந்துள்ளார்கள்.

இதற்கிடையில் அமெரிக்காவால் தேடப்பட்டு வந்த இரு ஈராக்கிய முன்னாள் தலைவர்கள் கூட்டணிப் படைகளால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

ஈராக்கின் முன்னாள் கல்வி, விஞ்ஞான அமைச்சர் மற்றும் சதாம் அரசின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் அவரது மருமகனுமான இன்னொருவரும் சிறைப்பிடிக்கப்பட்டு விட்டதாக கட்டாரிலுள்ள கூட்டுப்படை தலைமையகம் அறிவித்துள்ளது. இவர்களுடன் இது வரை கூட்டணிப்படைகளினால் சிறைப் பிடிக்கப்பட்ட முக்கிய ஈராக்கியத் தலைவர்களின் எண்ணிக்கை 7 ஆக உயர்ந்துள்ளது.

### இடைக்கால நிர்வாகி

இதேசமயம் ஈராக்கின் இடைக்கால நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஓய்வு பெற்ற ஜெனரல் ஜே கார்னர் நேற்று பக்தாத் வந்து சேர்ந்தார். ஈராக்கில் அடிப்படைத் தேவைகளான மின்சாரத்தையும் தண்ணீரையும் சீரமைப்பதே தமது முதல் முயற்சியாகவிருக்கும் என்று அவர் கூறியுள்ளார். (பி)

## சதாமின் மருமகன் யு.எஸ் படைகளிடம் சரண்

(பக்தாத்)

ஈராக்கில் சதாம் ஹுசைனின் மருமகன் அமெரிக்கப் படையினரிடம் சரணடைந்துள்ளார். சதாம் ஹுசைனின் இளையமகளின் கணவரான ஜமால் முஷ்தப்பா அப்துல்லா சுல்தான் என்பவரே இவ்வாறு சரணடைந்துள்ளவர்.

அமெரிக்கப் படையினரால் தேடப்பட்டு வரும் 55 பேர் கொண்ட பட்டியலில் சரணடைந்துள்ளவரின் பெயர் 40வது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (பி-9)

## ஈராக் மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கின்றனர்

(பக்தாத்)

ஈராக்கில் கொடுங்கோல் ஆட்சி நடத்தி வந்த சர்வாதிகாரி சதாம் ஹுசைனின் ஆட்சி முடிவுக்கு வந்ததை அடுத்து அந்நாட்டு மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் தொடங்கியுள்ளனர்.

சதாம் ஆட்சியில் மக்கள் ஒடுக்கப்பட்டவர்கள் போல இருந்து வந்தனர். சுதந்திரமாக எந்த நடவடிக்கையிலும் ஈடுபட முடியவில்லை. மத நம்பிக்கையுள்ளவர்கள் புனித யாத்திரை செல்லக் கூட தடைவிதிக்கப்பட்டிருந்தது.

அரசின் கெடுபிடிகள் காரணமாக மக்கள் அதிகம் வெளியில் தலைகாட்ட முடியாத நிலை இருந்தது. சதாம் ஆட்சி முடிவுக்கு வந்ததை அடுத்து இப்போது ஈராக்கிய மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

சதாம் ஆட்சியில் நாங்கள் வாய் திறந்து ஏதும் பேச முடியவில்லை. ஆனால் இப்போது நாங்கள் எதை வேண்டுமானாலும் பேசும் அளவுக்கு சுதந்திரம் கிடைத்துள்ளது போல் உணர்கிறோம் என்கிறார் 36 வயதான டாக்ஸி டிரைவர் அப்துல் ஹமீத்.

கடந்த பல ஆண்டுகளாக எங்கும் செல்ல முடியாத ஷியா பிரிவு முஸ்லிம் யாத்திரிகர்கள் இப்போது நஜாப் மற்றும் கர்பாலாவில் உள்ள புனிதத் தலங்களுக்கு யாத்திரை புறப்பட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கானவர்கள் இவ்வாறு செல்வதால் அவர்களை அமெரிக்க படையினர் தொலைவில் இருந்து கண்காணித்து வருகின்றனர்.

ஐ.நாவின் ஆதரவில் ஜோர்தான் வழியாக 50 லாரிகளில் வந்து இறங்கிய உணவு தானியங்கள் கிடங்குகளில் வைக்கப்பட்டுள்ளன. ஈராக் தெற்கு பகுதியில் உம்கஸார், பாஸ்ரா இடையே உள்ள ரயில் பாதை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. மனிதாபிமான முறையில் நிவாரணப் பொருள்களை அனுப்பி வைக்கவே இந்த ஏற்பாடு.

அரசு நிர்வாகம் ஸ்தம்பித்து விட்டதால் எங்கும் பதற்றமும் போட்டியும் அதிகரித்து வருகிறது. அமெரிக்க கூட்டுப்படைகள் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது.

மருத்துவமனைகளிலிருந்து திருடப்பட்ட கருவிகளையும், மருந்துகளையும் திருப்பிக் கொடுத்து விடுமாறு மதத்தலைவர்கள் விடுத்த வேண்டுகோளுக்குப் பலன் கிடைத்துள்ளது. பலரும் திருட்டுப் பொருள்களை திரும்ப ஒப்படைத்து வருகின்றனர் என்றும் அக்குழு தெரிவித்துள்ளது.

ஈராக்கில் உள்ள தேசிய அருங்காட்சியகத்திலிருந்து திருடப்பட்ட விலை உயர்ந்த 42 ஓவியங்களைக் கைப்பற்றியுள்ளதாக ஜோர்தான் தெரிவித்துள்ளது.

இதனிடையே சதாம் ஆதரவாளர்களுக்கு தஞ்சம் அளிப்பதாக அமெரிக்காவின் குற்றச்சாட்டை முறியடிக்க விசா இல்லாமல் வரும் ஈராக்கியர்களைஅனுமதிக்க முடியாது என்று சிரியா தெரிவித்துள்ளது.(பி)

## ரூ.120 கோடி மதிப்புள்ள ஹெரோயின் போதைப் பொருள் கடத்திய கப்பல் அவுஸ். கடலில் பிடிபட்டது

(சிட்னி)

சர்வதேச அளவில் ரூ120 கோடி மதிப்புள்ள ஹெரோயின் போதைப் பொருள்களைக் கடத்திச் சென்ற கப்பல் அவுஸ்திரேலிய கடற்படையினரிடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிடிபட்டது. அதிலிருந்த கப்பல் குழுவினரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த வாரம் விக்ரோறியா மாநிலத்தில் லோர்ன் என்ற இடத்தில் 50 கிலோ கிராம் ஹெரோயின் வைத்திருந்ததாக 4 பேர் பிடிபட்டனர்.

அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் பொலிஸார் சுங்க அதிகாரிகள் கடற்படையினருடன் தீவிர கண்காணிப்பு நடத்தினர்.

நியுகாஸில் நகரில் 35 கடல் மைல் தொலைவில் ஒரு கப்பல் வேகமாகச் செல்வதைக் கண்ட அதிகாரிகள் அதை நிறுத்துமாறு கூறினர்.ஆனால் நிற்காமல் செல்லவே அதிகாரிகள் அதை விரட்டிப் பிடித்தனர். (பி)

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் பெர்னாண்டஸ் சீனா விஜயம்

(பெய்ஜிங்)

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சீனாவிற்கு விஜயம் செய்துள்ளார். சர்வதேச முக்கியத்துவம் பெறும் இந்த விஜயத்தால் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளிற்கிடையிலான உறவு மேம்படும் என்று நம்பப்படுகின்றது.

ஜோர்ச் பெர்னாண்டஸுடன் 16 பேர் அடங்கிய உயர் மட்டக்குழு ஒன்றும் சீனாவிற்கு விஜயம் செய்துள்ளது.

சீனாவில் தங்கியிருக்கும் நாட்களில் அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஜியாங்செமின் சீன மத்திய படைத்துறை ஆணையகத்தின் தலைவர் மற்றும் பல முக்கிய பிரமுகர்களை ஜோர்ஜ் பெர்னாண்டஸ் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த இருக்கின்றார்.

அத்துடன் பெய் ஜிங் மற்றும் செனகல் ஆகிய இடங்களில் உள்ள படைத் தளங்களிற்கும் அவர் விஜயம் செய்ய இருக்கின்றார்.

கடந்த 11 ஆண்டுகளில் இந்தியாவின் உயர் மட்டத் தலைவர் ஒருவர் சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டிருப்பது இதுவே முதல் முறையாகும். (பி-9)

## பேச்சு நடத்தும் இந்திய யோசனைக்கு பாகிஸ்தான் வரவேற்பு

(இஸலாமபாத)

பாகிஸ்தானோடு பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்று இந்தியப் பிரதமர் விடுத்த அறிவிப்பை பாகிஸ்தான் ஏற்றுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தானின் வெளியுறவுத்துறை அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில், ஜம்மு-காஷ்மீர் பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த தமது நாடு தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாடுகளிற்கு அளித்த உறுதி மொழிக்கு ஏற்ப எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைத் தடுத்து நிறுத்த பாகிஸ்தான் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் எல்லைகளைப் பார்வையிட மூன்றாம் தரப்பு நாட்டின் பார்வையாளர்களை அனுமதிக்கலாம் என்று தெரிவித்துள்ள பாகிஸ்தான் அமைச்சர் அனைத்துப் பிரச்சினைகளையும் அமைதி முறையில் அணுகவே தமது நாடு விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். (பி-9)

## பாரிய அளவில் யுத்தக் கருவிகளை பிரிட்டன் கொள்வனவு செய்யாது

(லண்டன்)

பாரிய யுத்தக் கருவிகளை கொள்வனவு செய்வதற்கான திட்டத்தை பிரிட்டிஷ் இடை நிறுத்தியுள்ளதாக பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

தனது படைப்பலங்களை அதிகரிக்கும் நோக்கில் 232 யூரோ யுத்த விமானங்களையும், 160 கூட்டுத் தாக்குதல் விமானங்களையும், 42 சலஞ்ச விமான பீரங்கிகளையும், 12 நீர்மூழ்கிக் கப்பல்களையும் கொள்வனவு செய்ய பிரிட்டன் திட்டமிட்டிருந்தது.

ஆயினும், இப்பாரிய ஆயுதக் கொள்வனவுத் திட்டம் கைவிடப்பட்டுள்ளதுடன், குறைந்தளவு யுத்தத் தளபாடங்களை கொள்வனவு செய்ய பிரிட்டன் உத்தேசித்துள்ளது.

எதிர்கால யுத்த நடவடிக்கைகளின் போது நவீன தாக்குதல் தொழில் நுட்பங்களே முக்கிய பங்காற்றவுள்ளதால் அது குறித்து பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் அவ் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (பி-8)

## உலகின் பெரிய ‘சூப்பர் டாங்க்’ சீனா தயாரிப்பதாகத் தகவல்

(பெய்ஜிங்)

போரில் பயன்படும் உலகின் மிகப் பெரிய ‘சூப்பர் டாங்க்’ தயாரிப்பில் சீனா ஈடுபட்டுள்ளது என்று பாதுகாப்பு தொடர்பான செய்திகளை வெளியிடும் ‘டிபென்ஸ் வீக்லி’ தெரிவிக்கின்றது.

மேற்கத்திய நாடுகள் தயாரிப்புக்கு இணையாக நவீன தொழில் நுட்பம் கொண்டதாக அந்த டாங்க் அமைந்து இருக்கும் என்றும் அச் செய்தி தெரிவிக்கின்றது. ‘டிபென்ஸ் வீக்லி’யின் அடுத்து வர உள்ள இதழில் இந்த விபரம் வெளியாக உள்ளது.

‘சீன இராணுவம் வசம் 8,300 இராணுவ டாங்கிகள் உள்ளன. இது வேறு எந்த நாட்டிலும் இல்லாத அதிகளவு ஆகும். இதில் 6000க்கும் மேற்பட்டவை 1950ஆம் ஆண்டு வடிவமைப்புக் கொண்டதாகும். அமெரிக்க-ஐரோப்பிய நாடுகளின் இராணுவ டாங்கிகளுக்கு இணையாக ஒரு சில நூறு டாங்கிகளே சீனா வசம் உள்ளன. சீனாவிடம் தற்சமயம் இருப்பதில் நவீன டாங்கி 98ஆம் ஆண்டு வகையைச் சேர்ந்தது’ என்று ‘சௌத் சைனா மார்னிங் போஸ்ட்’ தனது செய்தியில் தெரிவிக்கின்றது.

அமெரிக்காவிடமிருந்து எம்1 அப்ரம்ஸ் டாங்கிகளை வாங்குவதில தைவான் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. இந்த நிலையில் சீனா புதிய நவீன டாங்குகள் குறித்து தனது கவனத்தைச் செலுத்தியுள்ளதில் வியப்பு ஏதுமில்லை.

அமெரிக்காவின் அப்ரஸ் டாங்குகள் ஈராக் போரில் முக்கிய பங்கு வகித்தது குறிப்பிடத்தக்கது. ஈராக் டாங்குகளை அமெரிக்கப்படைகள் எளிதில் அழித்தன. ஈராக் வைத்திருந்த டாங்குகள் 1980ஆம் ஆண்டுகளில் சீனா விநியோகம் செய்தவை ஆகும்.

‘சீனா கடந்த காலத்தில் சோவியத் வடிவமைப்பை மாதிரியாகக் கொண்டு தனது டாங்குகளைத் தயாரித்தது. சீனாவின் தற்போதைய ‘சூப்பர் டாங்கு’ உற்பத்திக்கும் ரஷ்யா தொழில்நுட்பத்தை அளிக்கும் என்று தெரிகிறது என்றும் ‘டிபன்ஸ் வீக்லி’ குறிப்பிட்டுள்ளது. (பி)

### சார்ஸ் நோய் விவகாரம்

## சீன நாட்டு நலத்துறை அமைச்சர் பதவி இழந்தார்!

(பீக்கிங்)

சீனாவில் அதிவேகமாகப் பரவி வரும்“சார்ஸ்” நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் தொகை அதிகரித்து வரும் வேளையில் சீனாவின் சுகாதார உடல் நலத்துறை அமைச்சரும், பெய்ஜிங் நகர மேயர் மீண்குவாங்கும் பதவியில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சார்ஸ் நோய் பரவுவதைத் தடுக்கும் நோக்குடன் வழமையாக ஒரு வார காலத்திற்குக் கொண்டாடப்படும் மேதின நிகழ்ச்சிகளை ரத்துச் செய்திருப்பதுடன், மக்கள் வேறு இடங்களுக்குச் செல்வதையும் சீன அரசு தடை செய்துள்ளது.

இதேவேளை, சார்ஸ் நோயின் உண்மையான தாக்கம் தொடர்பாகப் பூரண அறிக்கை ஒன்றை உலக சுகாதார நிறுவனம் சீன அரசிடம் கோரியுள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. (வ)

# தமிழர் விரும்பினால் பிரிந்து செல்லலாம் தந்தைசெல்வா வலியுறுத்தியது இதுவே

## மாவை.எம்.பி தெரிவிப்பு

(தென்மராட்சி)

எங்கள் தமிழ்த்தேசத்தில் நாங்கள் எமது ஆட்சியை அமைத்துக கொண்டு சிங்களதேசம் விரும்பினால் ஒரு இணைப்பாட்சியில் நாங்கள் இணையலாம் நாங்கள் விரும்பினால் தனியாகப் பிரிந்து போவதற்கான உரிமையைத்தான் சுயநிர்ணய உரிமையென தந்தை செல்வா 50 ஆண்டுகளுக்கு முன்னால் சொத்தாக விட்டுச் சென்றுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரான மாவை. சேனாதிராஜா தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம இடம்பெற்ற முக்கிய கலந்துரையாடலில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

தொகுதி ரீதியாக சுமார் இருநூற்றுக்கு மேற்பட்டவர்கள் சமுகமளித்திருந்த இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜாதொடர்ந்து உரையாற்றும் போது,

தந்தை செல்வா எம்மை அதற்காகதான் போராட்டப்பாதைக்கு அழைத்துச் சென்றார். இது புதிய கொள்கை அல்ல எமது இலக்கை அடைவதற்கு நாங்கள் ஒற்றுமையாக செயல்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். எங்களுடைய பாதை போராட்டப் பாதைதான். அந்த அத்திபாரத்தில் நின்று கொண்டு தான எமது ஒற்றுமையை வளர்க்க வேண்டும்.

எதிர்வரும், மே தினத்தில் நாம எமது தொழிலாளர் வர்க்கத்தில ஒற்றுமைகளையும் உரிமைகளையும் வலியுறுத்துவதுடன் அதற்காக எமது குரல் கொடுப்பதற்கு முன்னிற்க வேண்டும். இனத்தினுடைய விடுதலை மட்டுமல்ல, தமிழ் தேசத்தின் விடுதலை. அதனால் இடம்பெற்ற போராட்டத்தின் காரணமாக விரட்டப்பட்ட மக்களை மீண்டும் தமது சொந்த மண்ணுக்கு திருப்பி அனுப்புகின்ற பிரச்சினையும் உள்ளது.

முக்கியமாக எமது மக்களுடைய விடுதலை, தேசத்தின விடுதலை. இதற்காக நாம் அணிதிரள வேண்டுமோ, அணிதிரண்டு போராட வேண்டும். எமது இனத்தின் விடுதலைக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதவழியில் போராடிக் கொண்டிருக்கின்ற போது தமிழர் விடுதலைக் கூட்டணியினராகிய நாம் ஜனநாயக வழியில் போராட வேண்டியது அவசியமாகும் என்றார்.

இக்கலந்துரையாடலில்நாடாளுமன்ற உறுப்பினா நரவிராஜ் வீ.ஜீ.தங்கவேல், சட்டத்தரணி நா. பொன்னையா, க. சிவராஜா உட்பட பலர் உரையாற்றினர்.

யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ள கூட்டுமேதினத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான 15 பேர் கொண்ட ஏற்பாட்டுக்குழுவும் அங்கு நியமிக்கப்பட்டது. (உ-77)

# ஆலயத்தில் களவு போன பொருள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த புதன்கிழமை கொக்குவில் நந்தாவில் அம்மன் ஆலயத்தில் களவாடப்பட்ட நீர்இறைக்கும் இயந்திரம் கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி நீர்இறைக்கும் இயந்திரத்தை கோப்பாய் பகுதியில் ஒருவர் விற்கமுயன்றவேளை சந்தேகத்தின்பேரில் பிரஸ்தாப நபரைக் கைதுசெய்த பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின்போது அது ஆலயத்தில் திருட்டுப்போன நீர்இறைக்கும் இயந்திரம்என்பது தெரியவந்துள்ளது.

மேற்படி நபர்வசமிருந்து களவாடப்பட்ட சைக்கிள்ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. (உ-7)

# சங்கிலி அபகரிப்பு முயற்சி முறியடிப்பு

(நெல்லியடி)

முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து மூன்று வயதுப் பெண் குழந்தையின் தங்கச் சங்கிலி ஒன்று இனம் தெரியாத நபர் ஒருவரால் நேற்று முன்தினம் அபகரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

உரிமையாளர் தகுந்த நடவடிக்கை மேற்கொண்டதை அடுத்து அம்முயற்சி முறியடிக்கப்பட்டது. (க-44)

# ஆறு அரசியல் கட்சிகள் இணைந்து யாழில் மாபெரும் கூட்டு மே தினம்

## எழுச்சிக் கூட்டங்களுக்கும் ஏற்பாடு

(தென்மராட்சி)

சர்வதேச தொழிலாளர் தினமாகிய மேதினத்தை யாழ்ப்பாணத்தில் இம்முறை மாபெரும் கூட்டு மேதினமாக நடாத்துவதற்கான ஏற்பாடுகளை அங்கீகரிக்கபட்ட அரசியல் கட்சிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளும் நூற்றுக்கு மேற்பட்ட பொது அமைப்புகளும் இணைந்து முனைப்புடன் செய்து வருகின்றன.

இம்மாபெரும் கூட்டு மே தினத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பீ.ஆர்.எல்.எவ் (சுரேஸ் அணி), புதிய ஜனநாயகக் கட்சி, ஐக்கிய சோசலிச முன்னணி ஆகிய ஆறு அரசியல் கட்சிகளும் தமது பங்களிப்புக்களை வழங்கவுள்ளன.

அத்துடன் கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு துறை சார்ந்த தொழிற் சங்கங்கள்,மாணவர் அமைப்புகள், இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச சங்கங்கள் உட்பட சுமார் 100 க்கு மேற்பட்ட பொது அமைப்புக்களும் இம் மேதினத்தில் பங்கு பற்றுகின்றன.

இக்கூட்டு மேதினம் நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலில் இருந்து ஆரம்பமாகி, கோவில் வீதி வழியாக ஆஸ்பத்திரி வீதியை அடைந்து அங்கிருந்து யாழ்.மத்திய பேருந்து நிலைய வளாகம் வந்து அங்கிருந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தை அடையும்.

இம் மேதின ஊர்வலத்தில் 200க்கு மேற்பட்ட ஊர்திகளும் இடம்பெறும் என மேதின ஏற்பாட்டுக் குழுவின் தலைவரான க.சிவராஜா தெரிவித்துள்ளார். அத்துடன் 500க்கு மேற்பட்ட பதாதைகளும் இவ் ஊர்வலத்தில் கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது இவ்விதமிருக்க நடைபெறவுள்ள கூட்டு மேதினத்தின் மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழ்கின்ற மக்களின் பலத்தினையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்தும் வகையிலான ஒரு உரைகல்லாக இதனை ஏற்படுத்தும் முயற்சியில் விசேடமாக ஒவ்வொரு அரசியல் கட்சியும் தீவிர பங்காற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் ஆகியன கடந்த சனியன்று அவற்றின் அங்கத்தவர்களையும், ஆதரவாளர்களையும் அழைத்து மேதின ஏற்பாடுகள் குறித்து விரிவாக ஆலோசனை நடத்தியுள்ளன.

அத்துடன் கூட்டு மேதின ஏற்பாட்டாளர் குழுவினர் குடாநாட்டின் பல பாகங்களிலும் சென்று மேதினம் தொடர்பான எழுச்சிக் கூட்டங்களை நடத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (உ-77,4)

# பொது மகனைத் தாக்கிய பொலிஸ் அதிகாரி தலைமறைவு

(கண்டி)

பொது மகன் ஒருவரைத் தாக்கினார் என்று கூறப்படும் ஒரு இன்ஸ்பெக்டர் தரத்திலான பொலிஸ் அதிகாரி தலைமறைவாகியுள்ளதாக தெரியவருகின்றது.

கண்டி ஹோட்டல் ஒன்றில் வைத்து தன்னை அவர் அச்சுறுத்தினார் என்ற வகையில் கண்டி பொலிஸ் நிலையத்தில் ஒரு கான்ஸ்டபிளிடம் தாம் புகார் பதிந்து கொண்டிருந்த போது குறித்த பொலிஸ் அதிகாரி அவ்விடத்துக்கு வந்து தன்னை அச்சுறுத்திதுடன் தாக்கினார் என்று றோகன குமார் என்ற பொதுமகன் ஒருவர் கண்டி பிரதிபொலிஸ்மா அதிபரிடம் புகார் செய்துள்ளார். புகார் செய்யப்பட்டதிலிருந்து குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரி கடமைக்கு வரவில்லையென்று கூறப்படுகின்றது. (பி)

# வவு.வைத்தியர்கள் நேற்று அடையாள வேலை நிறுத்தம்

(வவுனியா)

வவுனியா பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் 44 வைத்தியர்கள் மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நேற்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். வைத்தியர்களுக்கு ஆதரவாக அங்கு கடமை புரியும் தாதிமாரும் சுகவீனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பொது வைத்திய சாலை அத்தியட்சகரின் இடமாற்றத்தை இரத்து செய்யக் கோரியும் உலக சுகாதார நிறுவனத்தினால் வவுனியா பொது வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டியை உடனடியாகவே வவுனியா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கக் கோரியும் திருமலை மாகாண சுகாதார சேவைகள்பணிப்பாளருடைய சேவை நீடிப்பு இரத்து செய்யப்பட்டு புதிய பணிப்பாளர் நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியும் இவ் வேலை நிறுத்தம் இடம்பெற்றது.

அடுத்த 48 மணி நேரத்துக்குள் தமது கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்காது போனால் மாற்றுத் தொழிற்சங்க நடவடிக்கையினை எடுப்பது குறித்து ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என வைத்திய அதிகாரிகள் சங்க வவுனியாக்கிளை எச்சரிக்கை விடுத்துள்ளது. (உ-8)

# சமகால அரசியல் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்து மரக்காலை, தச்சுக் கூடங்கள் மற்றும் பனைமரக் காலை உரிமையாளர்களுக்கான சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் மேற்குறிப்பிட்ட ஆலை உரிமையாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (த-3)

# பஷான்வாசிப்பு போட்டி முடிவுகள்

(குருநகர்)

புனித வாரங்களையொட்டி குருநகர் சென்.ஜேம்ஸ் தேவாலய திருஇருதயசபையால் நடாத்தப்பட்ட பஷான் வாசிப்பு போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம்-அன்ரன் பின்சியா, 2ஆம் இடம்-குமாரசிங்கம் ஜசித்தா, 3ஆம் இடம்-இராஜேஸ்வரன் தர்சன்.

**மத்தியபிரிவு**

1ஆம்இடம்-றெ.ஜசிந்தா, 2ஆம் இடம்-இராஜ் றெனுசியஸ், 3ஆம் இடம்-சேவியர் நிரோஜன்.

**மேற்பிரிவு**

1ஆம்இடம்-பிலிஸ் ஜயாளி, 2ஆம் இடம்-றோய் மைதிலி, 3ஆம்இடம்-ஜெனிற்ரா விஜோதினி.

**பொதுப்பிரிவு**

1ஆம்இடம்-அ.ஜசிந்தா, 2ஆம் இடம்-ஜேசுராஜ் கிளவுடியா.(உ-74)

# தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில்-கிழக்கு அண்ணா விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத் தாச்சிச் சங்க அனுசரணையுடன் அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடாத்தி வரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் இரண்டாவது சுற்றில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 4.45 மணிக்கு பண்டத்தரிப்பு சாந்த விநாயகர் விளையாட்டுக் கழகமும்,கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமும் பங்கு பற்றவுள்ளன. (உ-10)

## உலக வங்கியின் நிதி உதவியுடன்

# யாழ். மாவட்ட நீதிமன்றங்கள் விரைவில் புனரமைக்கப்படும்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து நீதிமன்றங்களும் உலக வங்கியின் ஆயிரத்து 500 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ளன என யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் யாழ். மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம் மற்றும் ஊர்காவற்றுறை நீதிமன்றங்களும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்துக்கான புதிய கட்டடங்கள் அமையவுள்ளன என அறியப்படுகின்றது.

இந்நீதிமன்றங்களில் இப்போதைய நிலைப்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளும் பொருட்டு நீதி அமைச்சின் உயர் மட்ட அதிகாரிகள் குழுவும் நீதி அமைச்சின் செயலாளரும் அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சென்றமை குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

# இன ஒற்றுமையை வலுப்படுத்த பிராந்திய சமாதான குழுக்கள்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் வாழும் பல்வேறு தரப்பட்ட இனங்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கில் பிராந்திய சமாதானக் குழுக்கள் அமைக்கும் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தகவல் வெளியிடுகையில்,

மட்டக்களப்பு,திருகோணமலை, அம்பாறை, ஆகிய மாவட்டங்களில் இத்தகைய 9 குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் அண்மைக் காலமாக ஏற்பட்டு வரும் இனக்கலவரங்களை அடுத்து இச்சமாதானக் குழுக்களை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இக்குழுவில் சமயத்தலைவர்கள், கல்விமான்கள், அரச,அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கம் பெறுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(உ-8)

# புலிக்கொடி ஏற்றுவது போர் நிறுத்த மீறலாம்

(வவுனியா)

வவுனியாவில் கடந்த 19ஆம் திகதி நடைபெற்ற அன்னை பூபதியின் 15ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரால் ஏற்றப்பட்ட புலிக் கொடியை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் இறக்குமாறு பணித்துள்ளதுடன், அவ்வாறு புலிக்கொடியை இறக்காது விட்டால் அது யுத்த நிறுத்த மீறல் எனப் பதிவு செய்வோம் எனவும் எச்சரித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, அன்னைபூபதியின் நினைவு நாள் நிகழ்வுகள் வவுனியா நகரசபை மைதானத்தில் கடந்த சனியன்று சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அதேவேளை, வீடியோ படப்பிடிப்பாளர் ஒருவர் நிகழ்வுகளை படம் பிடிக்க முயன்றார். இவர் செய்தியாளராக இருக்க முடியாது என்பதை அறிந்து கொண்ட விடுதலைப்புலிகள் இவர் தேசவிரோத கட்சியின் அல்லது ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேற்படி வீடியோ படப்பிடிப்பாளரை உள்ளே செல்ல விடாது தடுத்து நிறுத்தினர்.

ஆயினும் வீடியோப் படப்பிடிப்பாளர் தான் ஒரு செய்தியாளர் எனக் கூறிக் கொண்டு படம் பிடிக்க முயன்றார். அதனை அனுமதிக்காத விடுதலைப்புலிகள் அவரை அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

இதனையடுத்து, அந்தப் பகுதிக்குள் நுழைந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் புலிக்கொடியை பறக்க விடாது உடனே இறக்குமாறும் அவ்வாறு இறக்காவிட்டால் இதனை போர் நிறுத்த உடன்படிக்கையின் மீறல் ஆக இதனை நாம் குறிப்பிடுவோம் எனவும் எச்சரித்தனர்.

எனினும், தமிழீழ விடுதலைப் புலிகள் நிகழ்ச்சி முடிவடைந்த பின்னரே கொடி இறக்கப்படும் எனவும் தமது கொடியைப் பறக்க விடுதல், இறக்குதல் தொடர்பான விதிகளை எடுத்துக்கூறிய போது கண்காணிப்புக குழுவின் பிரதிநிதிகள் அங்கிருந்து அகன்றதாகவும் கூறப்படுகின்றது. (உ-10)

# முனைப்புடன் செயற்பட்டு நோய்களைத் தடுப்போம்
# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமெனலாம்

வாழ்வாங்கு வாழ்வதில் மகத்தான பங்கு வகிப்பது நோயற்ற வாழ்வு தான். எத்தகைய வசதி இருந்தும் நோய் நிரம்பிய வாழ்வு வறுமையிலும் கொடியதாகவே தென்படும்.இதற்கு நல்ல உதாரணமாக சலரோகத்தினைக் கூறலாம். செல்லமாக இதனை 'பணக்காரன வீட்டு நோய்'என்று கூறுவதும் குறிப்பிடத் தக்கது.

நோயாளர்களை பற்றி விமர்சிப் பதிலும்பார்க்க நோய்களை வராது கவனிப்பதிலும் வந்த நோயினை குணப்படுத்தும் முயற்சி பற்றி நோக்குதலும் மிக உன்னதமானது.

### சுகவாழ்வு வேண்டும்

'வருமுன் காப்போம்'என்பதற் கிணங்க நோய் ஏற்பட்ட பின் குணப் படுத்துவதிலும் பார்க்க நோய் ஏற்படாமல் தடை செய்வதே சாலச் சிறந்தது. 'விதி அனுப்பும் விண்ணப் பமே வியாதி'. விதியை மதியால் வென்றிட நோய்களை மாற்றியமைக் கும் செயற்பாடு நோயாளிக்கு மட்டு மன்றி அனைவருக்கும் தேவையான பொது நியாயமே-வாழ்க்கை என்ற விருந்தில் ஒவ்வொருவரும் மரணம் என்ற இறுதிப் பானத்தைக் குடித்துத் தான ஆக வேண்டும். ஆனால் அதற் கிடைப்பட்ட வாழ்வு, நல்வாழ்வாக சுகவாழ்வாக மலர வேண்டும் படுக்கும் போது பார்க்க வருபவர்களை விட எடுக்கும் போது வருவோர் தான் அதிகமாக இருக்க வேண்டும். இது தான் நோயற்ற நிறைவாழ்வு.

இதற்கு சூழற் சுகாதாரம் பேணுவது ஒரு சிறந்த அம்சம். உடல் நலப் பராமரிப்பு ஒவ்வொருவருடைய உரிமை மட்டுமல்ல பொறுப்பும் கடமையும் கூட. நல்வாழ்வை நோக்கி தன் குடும்பத்தாரையும் அக்கம் பக்கத் தாரையும் வழி நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு தனி நபர் ஒவ் வொருவருக்குமுரியது.

''சுத்தம் சுகம் தரும்'' என்பதற் கிணங்க எல்லோரும் சுகவாழ்வைப் பேணலாம். குறிப்பாக சுத்தமாகச் சிறியோரும் பெரியோரும் (குழந் தைகள்-முதியவர்)சிரத்தையற்ற வர்களாகவே இருப்பர். மலம், சிறுநீர் கழிப்பதில் அவர்களைக் கண் காணித்து சவர்க்காரம் பாவித்து அழுக்கு நீக்கும் பழக்கத்தைச் செயற்படுத்துவது பிறரின் கடமை யாகும். வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல், இளம்பிள்ளை வாதம், மஞசட்காமாளை போன்ற நோய்கள் மேற்கூறப்பட்ட வழிமுறைகளில்ஈ

**மருத்துவவிளக்கம்**

மூலம் பரப்பப்படுகின்றது.

### சுத்தம் பேணுவோம்

கண்ட கண்ட இடங்களில் துப்புதல், மூக்குச் சிந்துதல், வெற்றிலை பாக்கு உண்போர் கூடுதலாக துப்புவதாலும் காலையிலே பற்பொடி, பற்பசை பாவிப்போர் சுகாதாரம் பேணாமல் துப்புவதாலும் சூழல் மாசடைவது மட்டுமன்றி பல தொற்றுக் கிருமிகள் ஏற்படவும் காரணமாகிறது.

அன்றாடம் குடிநீராகப் பயன்படுத் திக் கொள்ளும் கிணற்றைச் சுத்தம் செய்வதிலும் அதி சிரத்தை தேவை. கான்களை நீர் தேங்காவண்ணம் கூட்டுவதிலும் குப்பை கூழங்களை குப்பைக்கூடு அல்லது குழிவெட்டி சேகரித்தல் போன்ற வழிகளில் சுத்தம் பேணப்படுவது மிக அத்தியா வசிய நிலைமையாகும்.பெரும்பாலும் அழுக்கான நீர்நிலைகளில் இருந்து தான் மூளைக்காய்ச்சல், யானைக் கால் நோய் என்பன ஏற்படுகின்றன.

மேலும் தலைகளில் தொற்றக் கூடிய பேன், சொடுகு போன்ற வற்றை நீக்குவதிலும் தினம் நாம் பாவக்கும் ஆடைகள் படுக்கை விரிப்புகள், சீப்பு முதலிய இன்னோரன்ன பொருட்களைச் சவர்க்காரம் கொண்டு கழுவுவதாலும் தோல் நோய்கள் பலவற்றிலிருந்து தப்பிக்கொள்ள லாம். தோல் நோய்களுக்கு மிகப் பிரதானமாக ஏற்பட்ட காயங்களைச் சீக்கிரம் குணப்படுத்த வேண்டும்.

### வளர்ப்பு விலங்குகளில் கவனம் தேவை.

இவறறை விடவும் நம் வீட்டின் வளர்ப்பு மிருகங்கள் மீதும் அதிக கவனம் கொண்டிருக்க வேண்டும். அவற்றிற்கு உரிய காலங்களில் மருந்தளித்தல், அவை வாழும் சுற்றுச் சூழலைக் கூட்டிச் சுத்தம் செய்தல் என்பன அவசியம். வளர்ப்பு மிருகங் களால் விலங்கு விசர்நோய் (Rabies) ஹைடரிக், பசுஅம்மை (Cowpox) போன்ற பாரிய நோய் கள் கூட ஏற்பட வாய்ப்பு இருக் கிறது. குறிப்பாக வீட்டைத் தவிர ஏனைய பகுதிகளில் எல்லாம் செருப்பு அணிந்து கொள்வது மிக நல்லது.

தனியொருவர் சுத்தத்தால் சுகத்தை நாடினாலும் போஷாக்கு நிறைந்த நிறை உணவை உட்கொள்ள வேண்டும். வள்ளுவர் கூறுவது போல,

''மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்'' (942)

''மாறுபாடில்லாத உண்டி மறுத்து உண்ணின் ஊறுபாடு இல்லை உயிர்க்கு'' (945) என்பதற் கிணங்க முன்பு உண்டது செமித்து விட்டதன் பின் உண்ண வேண்டும். அளவுக்கு அதிகமாகக் கிடைக்கும் போதும் அளவோடு உண்ண வேண்டும்.

### பிறர் மூலம் நோய்வரும்

இதைவிட தனியொருவர் தன்னலம் பேணி வாழ்ந்தாலும் கூட பிறர் மூலம் நோயாளி ஆவதற்கும் அதிக தூரம் இல்லை. அதாவது அழுக்கான கைகளோடு பிறரை வாழ்த்து முகமாக கைகளைக் குலுக்குதல், சனநெருக்கடிகளில் இருமுதல், தும்முதல், கொட்டாவி விடுதல் என்பன சொறி, சிரங்கு ளோடு தொடுகைகள், பேன் முதலான தொற்றுண்ணிகள், ஒருவர் பாவித்த ரவல், சீப்பு போன்றவற்றை பாவித்தல் முதலிய நோய் தொற்றக்கூடிய கைங்கரியங்களில் யாவரும் தமக்காக மட்டுமன்றி பிறர்க்காகவும் செயற் படல் வேண்டும்.

''எத்தனையோ மரணங்களின் கல்லறைகள் மருந்து வில்லைகளாக'' உள்ளன. எனவே எடுத்த தற்கெல்லாம் மாத்திரை போடும் பழக்கமும் கூடாது.

**ஜெ.சுபாஷினி**
**செம்மணி வீதி**

### வீட்டு வைத்தியம்

இனி சில வீட்டு வைத்தியங்கள் பற்றி நோக்குவோம்.

* குழந்தைகளுக்கு இருமல், ஜலதோஷம் இருந்தால் ஒரு நாளைக்கு மூன்று வேளை துளசிச்சாறும், தூது வளை இலை துவையலும் கொடுக் கவும்.
* பீனிசத்திற்கு ஒரு துண்டு மஞ் சளை ஆமணக்கு எண்ணையில் ஊறவைத்துச் சுட்டு, அதிலிருந்து வெளியாகும் புகையை சுவாசிக்கவும, (காகிதத்தைக் கூம்பாக்கி கூம் பினுள் சுட்ட மிளகைப் போட்டு அதன் புகையையும் சுவாசிக்கலாம்)
* வயிற்றுப் போக்கிற்கு மாதுளம் பிஞ்சை உடைத்து அரைத்து தயிர் அல்லது மோரிற் கலந்து இருவேளை எடுக்கவும்.
* நெஞ்செரிதலுக்கு - காலையில் ஊறவைத்த வெந்தயத்தை பழைய சாதத்தோடு வெங்காயம் சேர்த்து சாப்பிடவும்.
* கீரைப்பூச்சிக்கு வேப்பிலையை வெணணெய் போல் அரைத்து தினமும் காலையில் வெறும் வயிற்றில் உண்ணவும். (ஒரு வாரம் செய்யவும். குடும்பத்திலுள்ள அனைவரும் சம நேரத்தில் இதனை மேற்கொள்ள வேண்டும்)
* கறிவேப்பிலைத் துவையல் அல்லது பவுடர் அவித்துச் சாப்பிட்டால பித்தம் நீங்கும்.

இவ்வாறாக நாம் நோய் நொடி யின்றி சுக வாழ்வு வாழ்வோமாக.□

## மின்னல் தாக்கி சிறுவன் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் ஸ்கந்த புரம் பகுதியில் நேற்று முன்தினம் மின்னல் தாக்கியதில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

மேற்படி இடத்தைச் சேர்ந்த கருணா கரன்(வயது-15) என்பவரே இவ் வாறு உயிரிழந்துள்ளார். (உ-10)

## நிர்வாக சபை தெரிவு

(பாசையூர்)

ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் இடம் பெற்றபோது தலைவராக எஸ்.வேந்தன், செயலா ளராக அ. பாலேந்திரா, உபதலைவர் களாக ப.காண்டீபன்,ப. ஸ்ரீதரன், ப. தவராஜன்,பொருளாளராக அ. ஜெய காந்தன்,உபசெயலாளராக எஸ். கோபி ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர். (உ-72)

## மின் விளக்குகள் பழுது

(சண்டிலிப்பாய்)

மானிப்பாய் புக்கைதின்னிப் பிள்ளையார் ஆலயம், சென்ஆன்ஸ் றோ.க.பாடசாலை ஆகியவற்றின் சூழலில்பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகள் பழுதடைந்த காரணத் தினால் இப்பகுதியூடாக இரவில் செல்வோர் பெரும் சிரமமடைந்து வருகின்றனர். (உ-258)

## விவரணத் திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 10ஆம் திகதி,சர்வதேச மனிதஉரிமை கள் தினத்தில் நெல்லியடியில் ஸ்ரீலங்கா பொலிஸார் பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதல் சம்பவம் பற்றிய இரு மணி நேர விவரணத் திரைப்படம் ஒன்று சலனசித்திரம் அமைப்பினால் தயாரிக்கப்பட்டுள் ளது.

இத்திரைப்படத்தின் ஊடகவி யலாளருக்கான அறிமுகக்காட்சி சலன சித்திரம் யாழ்.செயலகத்தில் இன்று பி.ப. 3 மணிக்கு இடம் பெறவுள்ளது. (உ)

# முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும்

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களின் பாது காப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேணடும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

மூதூர் பகுதியில் தொடர்ந்தும் இடம் பெற்றுவரும் கலவரங்கள் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு கோரிக்கை விடப் பட்டுள் ளது.

அநத அறிக்கையில் மேலும் தமிழீழ விடுதலைப்புலிகள் இனப்பிரச்சினை யினை சமாதான வழியில் தீர்க்க முயலுகின்றனர் என்பதை செயலில் காட்ட வேண்டும்.

இதுவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் பொது ஜனஐக்கிய முன்னணியினதும் நிலைப்பாடா கும்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங் கம் கடந்த ஒன்றரை வருடங்களாக பேச்சுவார்த்தைகளை நடத்திவருகிறது.

எனினும் தமிழ் ,சிங்கள, முஸ்லிம், மககளுக்கிடையில் எது வித சமாதான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என அவ்வறிக்கையில் மேலும் குறிப பிடப்பட்டுள்ளது. (உ-8)

## மூதூர் வன்முறைகள் குறித்து புலிகள் கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம்மக்களுடன் ஒற்றுமையை வளர்க்க தாங்கள் முயற்சி செய்து வருகின்ற இந்த நிலையில் வன் முறைகள் இடம் பெற்று வருவது குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்சசெல்வன் கிளிநொச்சியில் உள்ள அரசியல்துறை நடுவப் பணி யகத்தில் தமிழர் விடுதலைக்கூட் டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களை அண்மையில் சந்தித்து பேசும் போது இந்த நியாயமான கவலையை வெளியிட்டார்.

இந்த சந்திப்பின் போது மூதூரில் இடம்பெறும் அசம்பாவிதங்கள் குறித்து ஆராயப்பட்டது.அங்கு நடை பெறும் வன்முறைகளைக் கட்டுப் படுத்துவதன் அவசியம் குறித்து கூட்டணி பாராளுமன்றஉறுப்பினர்கள் தமிழ்ச்செல்வனிடம் எடுத்துவிளக் கினர்.

இது விடயமாகக் கருத்துத் தெரிவித்த விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர்சு.ப. தமிழ்ச் செல்வன், முஸ்லிம்மக் களுடனான ஒற்றுமையைபலப் படுத்தவே நாங்கள தொடர்ந்தும் முயன்று வருகின்றோம்.ஆனால் வடக்கு கிழக்கு பிரதேசங்களில எங்களின் முயற்சிகளையும் மீறி சில அசமபாவிதங்கள் நடைபெற்றுவருகின் றன என்றார். (உ-8)

## பதவி உயர்வு

(கொழும்பு)

மத்திய அரசில் இருந்து வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கு உள் வாங்கபபட்ட அலுவலக சேவையாளர் களுக்குரிய பதவி உயர்வு 1993ஆம் ஆண்டிலிருந்து அனுப்பி வருவதாக மாகாண பொது நிர்வாக உள்ளூ ராட்சி கிராம வீதி அபிவிருத்திகைத் தொழில்கூட்டுறவுத்துறை அமைச் சின் செயலாளர் திருமதி சிவ சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையிலுள்ள மாகாண அமைச்சு அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற இது தொடர்பான பேச்சுவார்த்தையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும் உளளூராட்சி மன்றங் களில கடமையாற்றுகின்ற அலுவலக சேவகர்கள் சுகாதார தொழிலாளர்கள, காவலாளிகள்ஆகியோருக்கு ஆயிரத்து 100ரூபா பெறுமதியான சீருடை வழங்கப்படுவதை உறுதி செய்வதற் காக சுற்று நிருபம் ஒன்றை வெளி யிடுவதற்கும் இவர் முன்வந்துள் ளார். (உ-10)

## பொலிஸாரைத் தாக்கிய ஐ.தே.க.உறுப்பினரை கைது செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

நுவரெலியாவில் பொலிஸ் உத்தி யோகத்தர் ஒருவரை மக்கள் முன்னி லையில் வைத்து தாக்கி யதாக கூறப்படும் கொழும்பு மாவட்டத்திற் கான பாராளுமன்ற உறுப்பினரும் ஐககியதேசியகட்சி உறுப்பினருமான திலிநத பெரேரா என்பவரைக் கைது செய்ய பொலிஸார் துரித நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இவரை கைது செய்வதற்கான அனுமதியைக்கோரும் வகையில் நுவரெலியா நீதிமன்றில் அனு மதி கோரப்பட்டுள்ளது.

இதேவேளை,நீதிமன்ற அனுமதி கிடைத்ததும் அவரை உடனடியாக கைது செய்ய நடவடிக்கை எடுக் கவுள்ளதாக மத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நிமல்மெடி வத்தை தெரிவித்துள்ளார்.(உ-10)



இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் குருநகர் மக்களுக்கு மலசலகூடங்களை புனரமைக்க வழங் கிய 3000பைக்கட் சீமெந்து மற்றும் பேஷன்களை கையளிக் கும் வைபவத்தில் ,நன்றி கூறி குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணிச் செயலாளர் ம.குயின்ரன் உரை நிகழ்த்துகிறார். அமைச்சர், பங்குத்தந்தை அ.ஜெயசேகரம் அடிகள், முன்னணித் தலைவர் கி. கிறிஸ்தோப்பர் மற்றும் உபதலைவர் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.

படம் :குருநகர் நிருபர்



இலங்கை வங்கி அறிமுகப்படுத்தியுள்ள இலவச காப்புறுதித் திட்டத்தின்கீழ பயனாள ஒருவருக்கு வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் க. பாலசுப்பிரமணியம் காசோலை கையளிக்கிறாா.

# சமஷ்டி முறையினால் நாடுகள் பிளவுபட்டதாக வரலாறே இல்லை

## இதனை எதிர்ப்பது மடமைத்தனம் என்கிறார் ஐ.தே.க. எம்.பி. பத்தேகம சமிந்த தேரர்

(காலி)

**எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா, டட்லி சேனநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, சந்திரிகா பண்டாரநாயக்க, ரணில்விக்கிரமசிங்க ஆகியோர் சமஷ்டியை முன்வைத்தபோது இனவாதக் குழுக்கள் அன்றுமுதல் இன்றுவரை நாட்டைப் பிரிப்பதாக கூறிக்கொண்டு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன.**

சமஷ்டி முறையினால் நாடுகள் பிளவுபட்டதாக இதுவரை வரலாறு கிடையாது. சமஷ்டியால் நாடு பிளவுறும் என கூக்குரலிடுவது மடமைத்தனம்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் காலி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பத்தேகம சமிந்த தேரர் தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

பத்தேகம சமிந்த தேரர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,

இனநெருக்கடிக்கு சகல தரப்பும் இணைந்தே தீர்வுகாண வேண்டும்.

இதுவிடயத்தில் தெற்கில் இருந்து எழும் இனவாதக் கருத்துக்களுக்கும், ஊர்வலங்களுக்கும் ஒருபோதும் செவிசாய்க்கக்கூடாது.

சமாதானத்தை எதிர்த்து தெற்கு இனவாதக் குழுக்கள் ஏற்பாடு செய்யும் ஊர்வலங்கள், கூட்டங்களுக்கு பொது மக்கள் பங்களிப்புச் செய்வதில்லை.

இனவாதிகள் மாத்திரமே இவற்றில் பங்கேற்று வருகின்றனர்.

புலிகளுக்கு தனிநாடு வழங்கப் போவதாகவும், நாட்டைக் காட்டிக் கொடுப்பதாகவும் இனவாதிகள் கூச்சலிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

தேசிய இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வே சிறந்தது. இதன் மூலமே நிம்மதியான வாழ்க்கைச் சூழல் கிட்டும்.

இன்று மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் அரசியல் தீர்வுக்கான இறுதி சந்தர்ப்பமாகும். சுயாட்சியை ஏற்றுக்கொள்ள நாம் அனைவரும் தயாராக வேண்டும். இன்று ஏற்பட்டுள்ள சமாதானத்துக்கான இறுதிச் சந்தர்ப்பத்தை கை நழுவ விட்டால் அழிவைத் தவிர எதனையும் நாம் எதிர்காலத்தில் சந்திக்க முடியாது என்றார். (உ)

## ஐ.தே.முவின் எம்.பிக்கள் எண்மர் பிரிந்து செயற்படுவர்

(கொழும்பு)

பொ.ஐ.முன்னணிக்குள் ஜே.வி.பி.யை உள்வாங்கி பரந்த மக்கள் முன்னணியை அமைத்து அதன் மூலம் ஐ.தே.முன்னணி அரசை கவிழ்ப்பதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் இதற்கு அடிப்படையாக காலிக்கு அப்பாலுள்ள ஆடம்பர ஹோட்டலொன்றில் இறுதி ஆவணம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மே மாத நடுப்பகுதியில் ஒப்பமிடப்பட வுள்ளதாக ஜே.வி.பி. பாராளுமன்றக் குழுச் செயலாளர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அதிகாரச் சமநிலையை மாற்றியமைப்பதில் இது முன்னோடியாக அமைவதுடன், ஐ.தே.முன்னணியின் பெரும் பான்மையை குறைக்கும் விதத்தில் சுதந்திரமாக இயங்கும் குழுக்களை அமைப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபட்டு குழுக்களாக ஏற்கனவே இயங்கத் தொடங்கிவிட்டது. எதிர்வரும் யூன் மாதத்தில் ஐ.தே.முன்னணியின் எட்டு எம்.பிக்கள் தனியான குழுவாகச் செயற்படவிருக்கிறார்கள்.

இத்தகைய ஒரு சூழ்நிலை உருவாகும் போதே ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்கவோ, மாற்று அரசாங்கத்திற்கான ஏற்பாடுகளைச செய்யவோ முன்வருவார் என்று சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, பொ.ஐ.முவின் ஏனைய பங்காளிக்கட்சிகளுக்கு இது தொடர்பாக விளக்கும் ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஒப்பந்த வரைவின் பிரதிகளும் இக்கட்சிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

## பங்களாதேஷ் பயணம் முடிந்து ஜனாதிபதி நாடு திரும்பினார்

(கொழும்பு)



பங்களாதேஷுக்கான இருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளார்.

ஜனாதிபதி தனது பங்களாதேஷ் விஜயத்தின் போது அந்நாட்டுப் பிரதமர் பேகன் காலிதர்ஷியா, ஜனாதிபதி டாக்டர் இயாப்குடின் உட்பட முக்கிய அதிகாரிகள் பலரையும் சந்தித்து சமாதானப் பேச்சுவார்த்தைகள், பொருளாதார அபிவிருத்தித்திட்டங்கள் என்பன தொடர்பாக ஆராய்ந்துள்ளார். (உ-8)

## தமிழர் மீது யுத்தம் தொடுக்க துணை போகமாட்டோம்

### அமைச்சர் நூர்தீன் மசூர்

(கொழும்பு)

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் ஒன்றை மீண்டும் ஏற்படுத்துவதற்கு முஸ்லிம் தலைவர்கள் ஒருபோதும் துணை போகமாட்டார்கள் என வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூரதீன் மசூர் தெரிவித்துள்ளார்.

மன்னார் எருக்கலம்பிட்டி மகளிர் மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா நினைவு மலர் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பேசுகையிலேயே நூர்தீன் மசூர்இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

இலங்கையில் வாழும் மூவின மக்களும் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழ்வதற்கு சகலரதும் ஒத்துழைப்பு மிக மிக அவசிய மாகும்.

அதேவேளை, தனிப்பட்ட காரணங்களுக்காக அரசாங்கத்தை அச்சுறுத்துவதை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

தற்போதைய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதானப் பேச்சுவார்த்தை சகல சமூகத்திற்கும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும்.

அதற்காக அரசிற்கு சகல ஒத்துழைப்புக்களையும் நாம் வழங்கவுள்ளோம் என்றார். (உ-10)

## இணக்கம் காணும் வகையில் இலங்கை — இந்திய மீனவர்கள் மன்னாரில் சந்திக்க ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பது சம்பந்தமான பிணக்கிற்கு தீர்வு காணும் நோக்கில் இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்களுடன் எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதி மன்னாரில் சந்தித்து பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தவுள்ளனர்.

இது பற்றிய ஆலோசனையில் கூட்டமொன்று இராமநாதபுரத்தில் தென் இந்திய மீனவர் சங்கங்களின் சம்மேளனத் தலைமை நிர்வாகி விவேகானந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தின் நிறைவில் தென்இந்திய மீனவர் சங்கங்களின் சம்மேளனத் தலைமை நிர்வாகியான விவேகானந்தன் இலங்கையில் மீன்பிடிப்பது தொடர்பாகவும் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களையும் படகுகளையும் மீட்பது தொடர்பாகவும் மன்னார் மாவட்ட மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளோடு முதல் கட்டமாக பேச்சுவார்த்தையொன்றை நடத்தவுள்ளதாக தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்துத் வெளியிடுகையில், இலங்கையில் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள படகுகளை மீட்க அந்தப் படகுகளின் உரிமையாளர்கள் நீதிபதிமுன் ஆஜராகி குற்றத்தை ஒப்புக் கொண்டால் படகுகளை விடத்தயார் என கூறியிருப்பதால் அதற்கான முயற்சிகளில் சம்மேளனம் தற்போது ஈடுபட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக நிரபராதி மீனவர்களை விடுதலை செய்வதற்கான கூட்டமைப்பின் இரண்டு பிரதிநிதிகள் இலங்கை சென்று விசாரித்து விட்டு வந்த பின்னர் படகு உரிமையாளர்களை அனுப்ப முடிவு செய்துள்ளோம்.

அத்துடன், இலங்கை மீனவர்களின் தொழில் பாதிக்காத வகையில் எமது மீனவர்களை இலங்கைக் கடற்பகுதியில் மீன்பிடிக்க மன்னார் மீனவர்கள் அனுமதிதர தயாராக இருக்கின்றார்கள்.

இதுபற்றி உறுதியான இறுதி முடிவை எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள சந்திப்பில் எடுக்கவுள்ளோம் என்றார்.

இதேவேளை, இச்சந்திப்பின்போது வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்ட மீனவர் சங்கத் தலைவர் தனிஸ்லாஸ் ஆகியோரும் கலந்து கொள்வர் என கூறப்படுகின்றது. (உ-10)

## போரினால் ஊனமுற்ற 14 பேருக்கு இன்று காசோலை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கடந்த காலப் போர் நடவடிக்கைகளால் ஊனமுற்றவர்கள் மற்றும் குடும்பத் தலைவர், குடும்ப உறுப்பினர்களைப் பறிகொடுத்த குடும்பங்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு இன்று பி.ப. 2 மணிக்கு யாழ. செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

புனர்வாழ்வு புனரமைப்பு மீள் குடியேற்ற அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா இக்காசோலைகளை உரியவர்களிடம் கையளிக்கவுள்ளார்.

போர் காரணமாக ஊனமுற்ற 14 பேர் இன்றைய தினம் காசோலைகளை பெறவுள்ளனர்.

அவர்களின் பெயர்கள் வருமாறு, என்.மரியநாயகம்- 2ஆம குறுக்குத் தெரு யாழ்ப்பாணம், ஏ.தம்பிராசா- சரசாலை, கே.பரம்சோதி- அரியாலை, எஸ்.குஞ்சி- கைதடி கிழக்கு, எஸ்.சிவமோகன்- சங்கத்தானை, பி.மகேஸ்வரி- சுழிபுரம், கே.இராசம்மா- சாவகச்சேரி வடக்கு, ஜி.சிதம்பரப்பிள்ளை- தனங்கிளப்பு, எஸ்புவனதாஸ் தனங்கிளப்பு, எஸ்ஜெயமணி- சாவகச்சேரி, கே.வைரவநாதன்- அரியாலை, ஜெ.தவேந்திரன் - மட்டுவில் தெற்கு, ஆர்.மதியழகன்- அரியாலை, ஆர்.ராஜாஜி- நுணாவில் மேற்கு.

மேலும் போரினால் குடும்பத் தலைவர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களை இழந்த 87 குடும்பங்களுக்கு இன்றைய தினம் காசோலை வழங்கப்படவுள்ளது. (உ-7)

## உல்லாசப் பயணத்துறை பாதிப்பு

(கொழும்பு)

ஈராக்கில் ஏற்பட்டுள்ள யுத்தம் காரணமாக இலங்கையின் உல்லாசப் பயணத்துறைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக பேருவளை, காலி, ஹிக்கடுவ, இந்துருவை ஆகிய பிரதேசங்களில் உள்ள உல்லாச ஹோட்டலில் தங்கியிருந்த வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் ஈராக்கில் யுத்தம் ஏற்பட்டதும் படிப்படியாக தமது நாடுகளிற்கு திரும்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (உ-10)



சங்கானை மக்கள் வங்கிக் கிளையின் முதலாவது வனிதா சேவன கணக்குப் புத்தகத்தை வாடிக்கையாளர் ஒருவருக்கு கிளை முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளை வழங்கி வைக்கிறார்.

## சமாதான முயற்சிகளில் ரஷ்யாவும் அக்கறை

(மொஸ்கோ)

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகளில் தாம் அதிக அக்கறை கொண்டுள்ளதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றினைக் காண்பதற்கு எடுக்கப்பட்டு வரும் வெற்றிகரமான பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்தில் ரஷ்யா அக்கறை கொண்டுள்ளது என்று மொஸ்கோவுக்கான இலங்கையின் புதிய தூதருக்கு நியமனம் வழங்கும் வைபவத்தில் விளாடிமிர் புட்டின் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# சுபானு வருடம்

## புத்தாண்டுப்பலன்

### சனி,குரு,ராகு,கேது மாற்றங்கள்

**வாக்கிய பஞ்சாங்கப்படி 22.5.2003 இல் சனி இடப ராசியில் இருந்து மிதுனத்திற்கு இடம்பெயர்ந்து மிதுனராசியில் இரண்டரை வருடங்கள் வரை சஞ்சரிக்கும். 23.07 2003 இல் வியாழன் கற்கடக ராசியில் இருந்து சிங்க ராசிக்கு இடம்பெயர்ந்து ஒரு வருடத்துக்கு சிங்க ராசியில் சஞ்சாரம் செய்யும். 14.08.2003 இல் ராகு, கேதுக்கள் இடப விருச்சிக ராசிகளில் இருந்து முறையே மேட ,துலாராசிகளுக்கு மாற்றம் அடைந்து ஒன்றரை வருடம் வரை சஞ்சரிக்கும். இலங்கையில் இக்கிரகங்களின் மாற்றங்களால் பொருளாதார, இராணுவ, அரசியல், சமூகமாற்றங்கள் நடை பெறும்.**

**இம்மாற்றங்கள் பன்னிரு ராசிக்காரர்களுக்கும் ஏற்படுத்தும் பலா பலன்களைப்பார்ப்போம்.**

## விருச்சிகம்



(விசாகம்4,அனுஷம்,கேட்டை)

அன்புள்ள விருச்சிக ராசி அன்பர்களே!

எதிலும் கண்ணும் கருத்துமாக செயல்படும் உங்களுக்கு குரு பகவான் 30.7.2003 முடிய பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதும் 7இல் சஞ்சரிக்கும் ராகு பகவான் 28.8.2003 முதல் ஆறாம் வீட்டில் சஞ்சரிக்க இருபபதும் அனுகூலமான அமைப்பாகும். சனிபகவான் அஷ்டமத்தில் சஞ்சரிப்பதால் பொருளாதார நிலையில் தேக்கமும்,அடிக்கடி உடல் உபாதையும்எதிலும் கவனமாக செயல்பட முடியாத நிலையும் உண்டாகும். நீங்கள் எதிர்பாராத கடன்களை எதிர் கொள்ள நேரிடும்.குரு சஞ்சாரம் சறறு சாதகமாக இருப்பதால் யூலை இறுதி வரை ஓரளவுக்கு சாதக பலன் ஏற்பட்டாலும் எதிலும்எச்சரிக்கையாகசெயல்படுவது உத்தமம். இல்லற வாழ்வில் தற்போது உள்ள கருத்து வேறுபாடுகள் 28.8.2003 இல் முழுமையாக விலகி மகிழ்ச்சிகரமான சூழ் நிலை குடும்பத்தில் உண்டாகும். கூட்டுத்தொழில் ஆண்டு பிற்பகுதியில் சாதகமாக இருக்கும்.

உங்களின் தேக ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டிய காலம் ஆகும்.உங்களுக்கு உஷ்ண சம்பந்தமான உடல் உபாதைகள் ஏற்பட்டு சோர்வடைந்து காணப்படுவீர்கள். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்திலும் புத்திரர் குறிப்பாக மனைவிக்கு சிற் சில வயிற்றுக்கோளாறுகள் ஏற்படும். பொருளாதார ரீதியாக சற்று போராட்டமான காலமாகவே இருக்கும்.வர வேண்டியவரவுகளில் தடை தாமதம் ஏற்படும்.கணவன் மனைவி உறவு சுமாராக இருக்கும். பற்றாக்குறை ஏறபட்டு கடன்களை· பெற நேரிடும். செய்யும் தொழில் வியாபாரம் மூலம மந்தமான நிலையும் இலாபமும் குறையும்.அதிகமான எதிர்ப்பும் ஏற்பட்டு மன வருத்தம் அடைய நேரிடும். கொடுக்கல் வாங்கலும் சிக்கலைத் தரும். நெருங்கியவர்களே ஏமாற்ற நினைப்பார்கள். எனவே ,உசார் தேவை. உத்தியோகத்தில் நிம்மதி இருக்காது. மேலதிகாரிகளிடம் கடுமை தென்படும்.மாணவர்களின் கல்வியில் மந்த நிலை காணப்படும். அரசியல் வாதிகளுக்கு நெருக்கடியும்அவச்சொல்லும் ஏற்படும். விவசாயிகளுக்கு புழு,பூச்சிகள் கடன்களின் மூலம் தொல்லை ஏற்படும்.

**உடல் நிலை:** உங்கள் தேக நிலையில் உஷ்ண சம்பந்தமான உபாதைகள் ஏற்பட்டு மிகவும் சோர்வும், அமைதிக்குறைவும் உண்டாகும். அதிக கவனம் செலுத்தவேண்டும். குடும்பத்திலும் குறிப்பாக மனைவிக்கு வயிற்றுக்கோளாறுகள் ,கர்ப்பக்கோளாறுகள் ஏற்பட்டு மருத்துவச் செலவுகள் கூடும்.மற்றவர்களிடம் கடன் வாங்க நேரிடும்.ஆவணிமாதத்திற்குபபிறகு எதையும்சற்று சமாளிக்கும வல்லமை உண்டாகும். உடல் நிலையிலும் குடும்ப ஆரோக்கியமும் சற்று மேலோங்கும்.

**குடும்பம் குழந்தைகள்:** குடும்பத்தில் கணவன் மனைவி ஒற்றுமை சுமாராக இருக்கும். புத்திரர் மனைவி மூலம் மருத்துவச் செலவுகள் கூடும். பூர்வீக சொத்தை சிலர் விற்பார்கள். சிலருக்கு புதிய வீடு மாறும் நிலையும் ஏற்படும். சகோதர ஒற்றுமை சுமாராக இருக்கும். பொருளாதார நிலையில் பற்றாக்குறை ஏற்பட்டு கடன்கள் அதிகமாக பெற நேரிடும்.குடும்பத்தல் உறவினர்கள் வருகை மூலம் சற்று செலவுகளே ஏற்படும்.ஆவணி மாதத்திற்கு பிறகு நெருங்கிய உறவினர் ஒருவரின் மூலம் சற்று அனுகூலப் பலன் உண்டாகி ஏற்றம் படிப்படியாக சமாளிக்கக்கூடிய அளவிற்கு உண்டாகும்.

**உத்தியோக நிலை:** உங்களுக்கு எதிர்பாராத விதமாக இடமமாறுதல் ஏற்பட்டு தெரியாத இடம், பழகாத ஊழியர்கள்,அறிமுகம் இல்லாத மேல் அதிகாரிகள் என சற்று சங்கடமான நிலையே உண்டாகும். மனைவி குழந்தைகளை விட்டும் சிலர் பணி மாற்றத்திற்காக பிரிய நேரிடும்.இருந்தாலும் வருவாய் உயரும்.ஆனால், வரவேண்டிய நிலுவை பாக்கிகள் யாவும்தாமதமாகவே வரும்.வேலைப்பளுவும் அதிகரிக்கும்.ஆவணிமாதத்திற்கு பிறகு எல்லாம் சமாளிக்கும் வல்லமை ஏறபட்டு சற்று நிம்மதி அடைய முடியும்.

**தொழில் வியாபாரம்:** உங்கள் வியாபாரத்தில் இரும்பு,எண்ணெய்கெமிக்கலஸ்,ஆடைஆபரணங்கள் போன்றவற்றில் சுமாரான இலாபம் பெற முடியும்.பெரிய முதலீட்டில் புதிய தொழில் வியாபாரம் தொடங்குவது உசிதமான காலம் இல்லை. சிலருக்கு தொழில் வியாபார ரீதியாக நீண்ட தூரம் பயணம் மேற்கொள்ள நேரிடும்.அரசு வழியிலும்திடீர் சோதனை போன்ற போராட்டமான நிலையை சந்திக்க நேரிடும். எதிர்ப்புகள் அதிகரிக்கும்.ஆவணி மாதத்திற்குப் பிறகு மேற்கூறிய அனுகூலமற்ற பலன்களை சமாளித்து படிப்படியாக சுமாரான ஏற்றம் பெற ஆரம்பிக்கும்.

**பெண்களுக்கு:** உடல் நலம் உஷ்ண சம்பந்தமான உபாதைகளாலும் கருப்பை கோளாறுகளாலும்சற்று பாதிகும்.கவனம்தேவை. சோர்வும், மயக்கமும்,அசதியும் உண்டாகி நலம் குன்றி காணப்படுவீர்கள். வேலை செய்யும் இடத்தில் நிம்மதி இருக்காது.மேலதிகாரிகளின் கெடுபிடி அதிகமாகும்.திருமணகாரியங்கள் தடையை ஏற்படுத்தும் கணவன மனைவி ஒற்றுமை சுமாராக இருக்கும். அடிக்கடி பயணம் ஏற்பட்டு அலைச்சலைத் தரும்.

**பொதுவாழ்வில்உள்ளவர்களுக்கு:** எதிரிகளின் பலம் அதிகரிக்கும்.உங்கள் மூலம் வளர்ந்தவரே உங்களுக்கு எதிர்ப்பாக மாறுவார்கள். சற்று போராட்டமான காலமாகவே இருக்கும். உடல் நலம் சரியாக இருக்காது. கொடுத்தவாக்கை காப்பாற்ற முடியாது. பதவிக்கு சில நெருக்கடிகளும் அரசு மூலம் சோதனையையும் ஆவணி மாதத்திற்கு பிறகு சமாளிக்க முடியும்.

**கொடுக்கல் வாங்கல்:** கொடுக்கல் வாங்கலின் மூலம் சிக்கல்களும் போராட்டமும் ஏற்படும். இதனால் விரோதம்கூட ஏற்படலாம். நீண்ட நாட்களாக நடை பெற்ற வழக்குகள் இழுபறியாகவே இருக்கும். யாருக்கும் பெரிய தொகைகளை வாங்குவதோ கொடுப்பதோ வாக்குறுதி கொடுப்பதோ முன் ஜாமீன் இருப்பதோ தவிர்க்கப்பட வேண்டும். ஆவணிமாதத்திற்குப்பிறகு ஓரளவு சமாளிக்க முடியும்.

**விவசாயிகளுக்கு:** எதிர்பார்க்கும் அளவிற்கு விளைச்சல்கள் ஏற்படாது. மகசூல் குறையும்.புன்செய் பயிர்களில் கறுப்பு நிற புழு,பூச்சிகளால் சேதம் உண்டாகாது. அரசு வழியிலும் கடன்கள் பெறதாமத நிலை ஏற்படும். உங்கள் பொருளுக்கு நல்ல விலை ஏற்பட தாமதிக்கும். எனவே,பொருள் தேக்கம் ஏற்படும். ஆவணிமாதத்திற்குப் பிறகு கஷ்டங்களையும்,போராட்டம்,கடன் தொல்லைகளையும் சமாளிக்க முடியும்.

**மாணவ மாணவியருக்கு:** ஆசிரியர்கள் பெற்றோர் ஆதரவு சற்று குறையும். தீய நண்பர்களின் பழக்கம் அடியோடு நிறுத்தப்பட்டு கல்வியில் கண்ணும் கருத்துமாக இருந்தால் மட்டுமே ஏற்றம் ஏற்படும். எதிர் நீச்சல் போட்டு வெற்றி பெறலாம்.ஆவணி மாதத்திற்கு பிறகு எல்லா நிலைமைகளையும் சமாளிக்க முடியும்.கவனம் தேவை.

**கலைஞர்களுக்கு:** புதிய முயற்சிகளை தள்ளிப்போடுவது மிகவும் நல்லது. பொருள் வரவில் தடை புகழ் மங்கும் நிலை, நல்ல வாய்ப்புகள் கை நழுவும் சூழ்நிலையாவும் உண்டாகும்.இசை,நடனம், பாடல் துறையில் இருப்பவர்களுக்கு சற்று சுமாரான பலன்கள் ஏற்படும்.பொருள் வரவும் சுமாராக இருக்கும்.ஆவணி மாதத்திற்குப்பிறகுஓரளவு நிலைமையை சமாளிக்க முடியும்.

### 14.4.2003 முதல் 29.7.2003 வரை

பாக்கிய ஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பது எடுக்கும் முயற்சியில் அனுகூலத்தை ஏற்படுத்தும் அமைப்பு என்றாலும் அஷ்டமச் சனி நடை பெறுவதால் குடும்பவாழ்வில் அமைதி அற்ற சூழ் நிலை நீடிக்கும். உங்களுக்கு இக்காலம் அவ்வளவாக நற்பலன்களை எதிர்பார்க்க முடியாது. குடும்பத்திலும் வெளி வட்டார பழக்கத்திலும் சஞ்சலத்தையும் தேவையில்லாத வீண் பிரச்சினைகளையும் சந்தித்து அமைதிக் குறைவு உண்டாகும் கணவன் மனைவி இடையே உறவு சற்றே சாதகமாக இருக்கும்.பழைய கடன்களை அடைப்பதற்கு சிரமம் மேற்கொள்ள நேரிடும். பணியில் இருப்பவர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்க தாமதம் ஏற்படும்.எதிரிகளின் பலம் குறைந்து உங்கள் பலம் படிப்படியாக அதிகரிக்கும். செய்யும் தொழில் வியாபாரம் இலாபம் உண்டாக்கினாலும் சில கெடு பிடிகளால் செலவுகளும் உண்டாகும்.கொடுக்கல்வாங்கலில்சற்று நற்பலன் ஏற்படும். அடிக்கடி வெளியூர் பயணம் ஏற்படும். சற்று அனுகூலமான பலன்கள் கிடைக்கும்.விவசாயிகளுக்கு புழு,பூச்சியும் கடனும் சற்று தொல்லைகளைத் தரும்.

### 30.7.2003முதல் 28.8.2003 வரை

அஷ்டமச்சனி நடை பெறுவதும் 10ஆம் வீட்டில் குரு சஞ்சரிப்பதும் தொழில் பொருளாதார ரீதியாக சங்கடத்தை உண்டாக்கும் அமைப்பாகும். எதிலும் சற்று கவனமாக இருப்பது நல்லது.தேக ஆரோக்கியமும் உஷ்ண சம்பந்தமான வைகளால் பாதிக்கப்பட்டு மருத்துவச் செலவுகள் மனைவி வழியிலும் ஏற்படும்.பொருள் வரவில் தடை ஏற்படுத்தும்.வரவேண்டிய பாக்கிகள் வசூலாகாது. குடும்பவாழ்வில் கணவன் மனைவி உறவு திருப்திகரமாக அமையாது. நெருங்கிய உறவினர் பகைமை பாராட்டுவார்கள்.கடன்கள் அதிகரிக்கும். சிலருக்கு பூர்வீக சொத்து இழப்பும் உண்டாகும். வண்டி வாகனங்கள் பழுதடையும்.வெளியூர்பயணங்களில் மிகவும கவனமாக இருப்பது உத்தமம். தொழிலில்மந்தமான நிலையையும் போட்டி பொறாமைகளையும் சந்திக்க நேரிடும்.வியாபாரம் அவ்வளவாக இலாபம் ஏற்படுத்தாமல் பொருள் தேக்கம் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு உடல் சோர்வு ஏற்பட்டு விடுப்பில் செலவார்கள்.மாணவர்கள் கல்வியில ஆர்வம் குறையும்.விவசாயிகளுக்கு கடன்களால் விரோதம் உண்டாகும்.எதிலும் உஷாராக இருப்பது உத்தமம்.

### 29.8.2003முதல் 26.10.2003வரை

ராகு 6இல் சஞ்சரிப்பதால் குரு, சனியால் ஏற்படும் சங்கடங்களை சமாளிக்கும்வலிமை ஏற்படும். புதிய முயற்சிகளில் ஈடுபடும்போது மிக எச்சரிக்கையாக இருப்பது உத்தமம். தேக ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.மாத முற்பகுதியில் மனமகிழ்ச்சியும் பிற்பகுதியில் சோதனையும் உண்டாக்கும் அமைப்பாகும்.குடும்பத்தில் கணவன் மனைவி உறவு சுமாராக இருக்கும். புத்திரர்களுக்கு சுபச்செலவுகள் உண்டாகும். கூட்டுத்தொழில் செய்வோர் எந்த சங்கடங்கள் ஏற்பட்டாலும் கவனமாக இருப்பதால் எதையும் சமாளிக்கும் வல்லமை ஏற்படும். புதிய தொழில் தொடங்குவது,புதிய, பெரியமுதலீடுகளை கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுத்துவது போன்றவற்றில் மிகுந்த எச்சரிகைதேவையாகும். உத்தியோகத்தர்களுக்கு ஓரளவு நற்பலன்கள் கூடி வரும்.மாணவர்களின் கல்வியில் கவனம் செலுத்தினால் முன்னேற்றம் உண்டாகும். கலைஞர்கள், அரசியல்வாதிகளுக்கும் புகழ் கூடும். பட்டகடன்களால் சங்கடம் ஏற்பட்டு நெருங்கியவர் உதவியால் சமாளிக்க முடியும். விவசாயிகளுக்கு சுமாரான விளைச்சல் ஏற்படும்.

### 27.10.2003முதல் 4.1.2004 வரை

அஷ்டமஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனிபகவான் வக்ரம் பெற்றிருப்பதும் 6இல் ராகு சஞ்சரிப்பதும் சற்று சாதகமான அமைப்பாகும். உடல் நிலையில் முன்னேற்றம் உண்டாகும். உஷ்ண சம்பந்தமானவைகள் படிப்படியாக குறைந்து நலம் ஏற்படும். குடும்பத்தில் நிம்மதியும் ஆரோக்கியமும் சந்தோஷமும் ஒற்றுமையும் ஓரளவு ஏற்படும்.பொருளாதார ரீதியில் சற்றே பணவரவுகளில் தடை நீங்கி விடுவதால் மகிழ்ச்சியான நிலை நிலவும். கடன்கள் படிப்படியாக விலகும். தொழிலும் வியாபாரமும் உயரும். இலாபங்கள் ஓரளவுக்கு ஏற்பட்டு குடும்பத்தில் கஷ்டங்கள் விலகும்.கொடுக்கல் வாங்கல் சிக்கல் இன்றி வழக்கம்போல நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகத்தில் படிப்படியான ஊதிய உயர்வும் பதவி உயர்வும் ஏறபடுவதால் பெருமை, செல்வாக்கும் உயரும் காலமாகும். பெண்களுக்கு சுபகாரிய முயற்சிகளில் சற்று தாமதித்து வெற்றி கிடைக்கும். புதிய வேலை வாய்ப்புகள் உண்டாகும். அரசியல் வாதிகளுக்கு சேவை மனப்பான்மை ஏற்பட்டு மக்கள் ஆதரவுகள் பெருகும். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக திகழ்வார்கள். விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகரிக்கும்.

### 5.1.2004முதல் 27.3.2004வரை

குரு,சனி வக்ரம் பெற்றிருப்பதும் 6இல் ராகு சஞ்சரிப்பதும் சாதகமான அமைப்பாகும்.தொழில் பொருளாதார ரீதியாக இருந்த நெருக்கடிகள் சற்று விலகும் உங்களின் தேக நிலையில் ஆரோக்கியமும் சுறுசுறுப்பும் குடிகொண்டு வலிமையும் வல்லமையும் உண்டாகும். உங்களுக்கு ஏற்பட்ட எல்லாவிதமான தொழில் வியாபார நெருக்கடிகள் யாவும் விலகி இலாபமும் ஏற்றமும் பெற்று சிறப்படையுமகாலமாகும்.திடீர்தனவரவுகளால் பூரிப்பும் மகிழ்ச்சியும் உண்டாகும். நண்பர்கள் உதவியின் மூலம் புதிய முயற்சிகள் திட்டங்களில் வெற்றி உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் சிறப்படைவீர்கள். உத்தியோக ரீதியாக தேவையான விரும்பிய இடமாறுதலும் குடும்பத்தாருடன் ஒன்றாக உல்லாச பயணமும் செல்வீர்கள். புதிய சொத்துக்கள் வாங்கும் அமைப்பும் ஏற்படும். கலைஞர்கள் வெளியூர், வெளிநாட்டு பயணங்களின் மூலம் சிறப்பான நற்பலன்களை அடைவார்கள். புதிய வாய்ப்புகள் அதிகரிக்கும். மாணவர்களுக்கு வெற்றி மேல் வெற்றி கிட்டும்.விவசாயிகள் கடன் தொல்லை மறையும்.

### 28.3.2004முதல் 12.4.2004 வரை

6இல் ராகு சஞ்சரிப்பதும்10இல் உள்ள ராகு வக்ரம் பெற்றிருப்பதும் மறைமுக எதிர்ப்புகளை குறைத்து சாதகப் பலனை உண்டாக்கும். உங்களுக்கு உடல் அசதி,கண் எரிச்சல் போன்றவை ஏற்பட்டு மறையும். குடுமபத்தில் மருத்துவச் செலவுகள் குறையும். புத்திரர்களின் மூலம் அனுகூலமும் நண்பர்கள்,உறவினர்கள் மூலம் சிற்சில உதவிகளும் தக்க சமயத்தில் கிடைக்கும். பொருளாதார நிலை சீராகவே இருக்கும். கடன்கள் படிப்படியாக குறைந்து விடும். அசையாச்சொத்து வகையில் ஏற்படட மறைமுக எதிர்ப்புகளும் வம்பு வழக்குகளில் இழுபறியும் குறைந்து சாதகமாகும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி அடையும் உத்தியோகத்திலவேலைப்பளு குறைந்து அலைசசல்கள் ,தேவையற்ற வீண் பயணங்கள் யாவும் குறையும். பெண்களுக்கு திருமணம் போன்ற சுபகாரியத் தடைகள் விலகி நல்ல வரன அமையும்.கணவன் மனைவி உறவு அன்புடன் காணப்படும். மாணவர்கள் பெற்றோரை பெருமைப்படுத்துவார்கள்.அரசியல் வாதிகளும் கலைஞர்களும்புகழ்,பெருமை அடைவார்கள.விவசாயிகளுக்கு விளைச்சலில் திருப்தி ஏற்படும்.

### நட்சத்திர பலன்

**விசாகம் 4-ஆம் பாதம்:** எதை எடுததாலும் சற்று போராட்டமான காலமாதலால் தடை ஏற்படுத்தி ஆவணி மாதத்திற்குப் பிறகு படிப்படியான வளர்ச்சியினையும் எதையும் எதிர் நீச்சல் போட்டு சமாளிக்கும் வல்லமையும் உண்டாகும்.சிற் சில உடல பாதிப்புகளும் ஏற்பட்டு மறையும். மறைமுக எதிர்ப்புகள்தொழில் வியாபார ரீதியாக உண்டாகி மறையும். எதிலும் கவனமாக ஈடுபட்டால் உத்தம பலன் கிட்டும்.

**அனுஷம்:** சுபகாரியங்களில் தடை தாமதம் ஏற்பட்டாலும் ஆவணி மாதத்திற்குப் பிறகு எதையும்சமாளித்து நல்ல வரனாக அமையும். பொருளாதார நிலையிலும் வரவுகளில் அடிக்கடி தடை தாமதம் ஏற்படும். கடன்களின் மூலம் தொல்லைகள் ஆவணி மாதத்திற்குப் பிறகு விலகும். கொடுக்கல் வாங்கலில் .பெரிய தொகைகளை ஈடுபடுத்துவதை தவிர்க்கவும். கணவன் மனைவி ஒற்றுமை சுமாராக இருக்கும். மாணவர்களின்கல்வியில் நல்ல ஆர்வமும் கவனமும் தேவையாகும். பெண்களுக்கு ஓரளவு சுமாரான பலன்கள் ஏற்படும்.

**கேட்டை:** உங்கள் தேக நிலை சுமாராக இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் எதிர்ப்புகள் ஏற்பட்டாலும் மனச்சோர்வு கொள்ளாமல் ஆவணி மாதத்திற்குப்பிறகு எதிர்ப்புகளை சமாளிக்கும் வல்லமை ஏற்படும்.உங்கள் பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகள் உங்களுக்கு சாதகமான தீர்ப்பினையே பெற்றுத் தரும்.வேலைவாய்ப்பினைத் தேடும் ஆண்,பெண்களுக்கு சற்று தாமதம் ஆனாலும் வேலை கண்டிப்பாக அமையும்.கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பற்பகுதியில் பெறுவார்கள்.

**தோஷமும், பரிகாரமும்:** உங்களுக்கு ராகு, கேது சாதகமற்று சஞ்சரிப்பதால் 28.8.2003 முடிய துர்க்கை வழிபாடும்,விநாயகர் வழிபாடு செய்வதும், அஷ்டம சனி நடைபெறுவதால் ஆஞ்சநேயர் வழிபாடும்,சனி பிரீதிசெய்வதும், சனிக்கிழமை விரதம் இருப்பதும், நீலக்கல் மோதிரம் அணிவதால் ஏற்றத்தை உண்டாக்கும். 30.7.2003 முதல் ஜீவன ஸ்தானத்தில் 10இல் குரு சஞ்சரிப்பதால் குரு பிரீதி செய்வதும்,தெட்சணாமூர்த்தி வழிபாடு செய்வதும்ஏற்றம் தரும்.(தொடரும்)

## பாக்.பிரஜைகளை விடுவிக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இருந்து இத்தாலிக்குச் சட்ட விரோதமான முறையில் பயணம் செய்ய முயற்சித்ததாகக் கூறி இலங்கைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 21 பாகிஸ்தானிய பிரஜைகளையும் விடுவிப்பது தொடர்பாக சட்ட மாஅதிபருடன் பேசுவதற்கு பாகிஸ்தானிய உயர் ஸ்தானிகராலயம் துரித நடவடிக்கை எடுத்துவருகிறது.

கடந்த முதலாம் திகதி கொட்டாஞ்சேனையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த சமயமே குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் இவர்கள்கைது செய்யப்பட்டனர். (உ-10)

## இளைஞர் பலி

(மன்னார்)

முஸ்லிம் ஊர்காவலர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அருவியாற்றைச்சேர்ந்த பீற்றர் (வயது-28) என்பவர் உழவு இயந்திரத்தில் மண் ஏற்றிக் கொண்டு வந்த போது இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

இச் சம்பவம் தொடர்பாக மன்னார் கண்காணிப்பு குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன்,பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ-8)

## மேதின ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ள மேதின விழாவில் கலந்து கொள்ளும வகையில் அன்று மு.ப 10 மணிக்கு நீர்வேலி கண்ணாடித்தொழிற்சாலை ஊழியர் சங்கத்தின் மேதின ஊர்வலம் நீர்வேலி கந்தசாமி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.

எனவே,ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் மேற்படி சங்க உறுப்பினர்கள் அனைவரையும் நீர்வேலி கந்தசாமி சனசமூக நிலையத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-10)

# இன்று ஒரு தகவல்

## செல்வத்தின் பயன் என்ன?

ஓர் ஊரில் ஒரு பெரிய செல்வந்தர் இருந்தார். பணத்துக்குப் பஞ்சம் இல்லை. அதனால் இந்த உலகத்தில் முடியாத காரியம் எதுவுமில்லை யென்று நினைத்தார். பணம் இருந்தாலே அந்த நினைப்புத் தானாக வந்துவிடும். அதனால இவரும் அப்படி நினைத்ததில் தப்பு ஒன்றும் இல்லை. அந்த ஊருக்குக் குரு நானக் ஒரு தடவை வந்தார். அவருக்கு இந்தச் செல்வந்தர் வெகுபிரமாதமாக ஊர் எல்லையில் ஒரு வரவேற்பும் கொடுத்தார். எங்கள் வீட்டுக்குவந்து விருந்து உண்டுவிட்டு போகவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவரும் 'சரி' என்று ஒத்துக் கொண்டார்.

உடனே தன்னுடைய பங்களாவில் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு பண்ணினார். குரு நானக்கை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய் உட்கார வைத்தார். "ஐயா! நான் இந்த ஊரிலேயே மிகவும் பெரிய வசதி உள்ளவன். என்னால் எல்லாம் முடியும். உங்களுக்காக நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள். எதுவாக இருந்தாலும் பரவாயில்லை! எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. என்னாலே செய்யமுடியும். என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள் என்று மிகவும் பணிவாக சொன்னார்."

இதைக் கேட்டதும் குருநானக் கொஞ்சநேரம் சிந்தித்தார். அதன் பின்னர் தன்னுடைய சட்டைப்பைக்குள் கையை விட்டு ஒரு பழைய ஊசி ஒன்றை எடுத்து அந்தச் செல்வந்தரிடம் கொடுத்தார். "இதோ பாருங்கள், நீங்கள் இவ்வளவு தூரம் கேட்பதனாலே சொல்கிறேன். எனக்கு நீங்கள் செய்யவேண்டிய உதவி இதுதான் என்றார். ஊசியைக கையில் வாங்கிவிட்டு "இதை என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள்" என்றார் அவர்.

"நீங்கள் செய்யவேண்டியது என்னவென்றால், இந்த ஊசியைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும். நாம் இருவரும் இறந்து போனதன் பின்னர் இன்னொரு உலகத்திலே நாம் சந்திக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அப்போது இந்த ஊசியை என்னிடம் கொண்டு வந்து கொடுங்கள். இது தான் நீங்கள் எனக்காகச் செய்ய வேண்டிய உதவி" என்று லேசாகச் சிரித்துக் கொண்டே குரு நானக் சொன்னார்.!

இதைக் கேட்டவுடன் அந்தப் பெரிய செல்வந்தர் விழிக்க ஆரம்பித்தார். "அது எப்படி? நான் சாகிறபோது எப்படி இந்த ஊசியை எடுத்துக் கொண்டு இன்னொரு உலகத்துக்கு வரமுடியும்?" என்றார். "ஊசிமாதிரி ஒரு சிறிய பொருளைக் கூட இந்த உலகத்தைவிட்டு நாம் போகிறபொழுது, எடுத்துக் கொண்டு போகமுடியாது என்னும் போது உங்களுடைய செல்வத்தையெல்லாம் எப்படி அங்கே எடுத்துக் கொண்டு வரப்போகிறீர்கள்?" என்று கேட்டார் குரு நானக். அதன் பின்னர் தான் அந்தப் பெரியவர் யோசிக்க ஆரம்பித்தார்.

"இதோ பாருங்கள்! நாம் செய்கின்ற நல்லது கெட்டதுதான் கடைசி வரைக்கும் நம்முடன் இருக்கும். மற்றவர்கள் நன்றாக இருக்கவேண்டும் என்பதற்காக பொருளைச் செலவு செய்யவேண்டும். அப்டிச் செய்யவில்லை யென்றால் எந்தப் பிரயோஜனமும் இல்லை" என்று குருநானக் சொன்னார். அதன் பின்னர் தான் அந்தச் செல்வந்தரின் அறிவுக் கண் திறந்ததாம். உடனே குரு நானக்கை வணங்கினார். "ஐயா! என்னிடமிருந்த ஆணவம் போய்விட்டது. இனிமேல் என்னிடமுள்ள செல்வத்தை நல்ல வழியில் செலவழிப்பேன்" என்று சொன்னார்.

நம்மிடமிருக்கிற பணம் எப்பொழுதும் நம்முடனேயே வந்து கொண்டிருக்காது என்பது இதிலிருந்து புரிகிறது. அதற்காக நாம் பணம் சேர்ப்பதைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய

# ஜனாதிபதி மேலும் பொறுமை காப்பது நாட்டின் பாதுகாப்புக்கு நல்லதல்ல

## க.கா.குழுவின் சிபார்சு குறித்து ஜே.வி.பி சீற்றம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிஅணியை கடற்படைப்பிரிவாக அங்கீகரிக்க வேண்டுமென யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு சிபார்சு செய்துள்ளமை அவர்கள் தனிநாடு ஒன்றை அமைப்பதற்கு வழிவகுப்பதாக அமையுமென ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.

புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்டையில் இலங்கை அரசாங்கம் குறிப்பாக இலங்கையின் கடற்படை, விடுதலைப்புலிகளின் கடற்பிாிவான கடற்புலிகளை தனியான கடற்பிரிவாக அங்கீகரிக்க வேண்டுமென போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் ரைகேவ் ரெலவ்சன் இருதரப்பினருக்கும் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் சிபார்சு செய்திருந்தார்.

இந்த அறிக்கையை கண்டிக்கும் வகையில் ஜே.வி.பி வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தஅறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாட்டின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு பொறுப்புள்ள ஜனாதிபதி மேலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியதில்லை.

உத்தேச ஆலோசனை நாட்டின ஒருமைப்பாட்டிற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

எனவே, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் சிபார்சை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்பது குறித்து தெளிவாக விளக்கமளிக்க வேண்டுமென அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

# பூரண அரச மரியாதையுடன் தேரரின் இறுதிக்கிரியைகள்

## பல்வேறு தரப்பினரும் பங்கேற்பு

(தென்மராட்சி)

இம்மாதம் 15ஆம் திகதி கொழும்பில் காலமான நயினை ரஜமகா விகாரையின் முன்னாள் பிரதம குருவான ராஜகீய பண்டித சங்கைக்குரிய பிராமண வர்த்தே தம்மகீர்த்தி திஸ்ஸநாயக்கா தேரரின் இறுதிக்கிரியைகள் பூரண அரச மரியாதையுடன் நேற்று மாலை நயினாதீவில் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் எரிபொருள், மின்சக்தி அமைச்சர் கருஜெயசூரியா, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்கர் ஜயலத் ஜவர்த்தன, எதிர்க்கட்சித்தலைவர் மகிந்தராஜபக்ஷ ஆகியோர் பங்கு பற்றினர்.

அத்துடன், பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகளும் பங்கு பற்றி மறைந்த தேரருக்கு தமது இறுதி மரியாதைகளைச் செலுத்தினர்.

88 வயதான தேரர் இவ்விகாரையின் பிரதம குருவாக இருந்து நயினாதீவு மக்களுக்கு இனமத மொழி பேதமற்ற சேவைகளைச் செய்ததன் காரணமாக இப்பகுதி மக்களின் இதயத்தில் நீங்கா இடத்தினை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமரத்துமடைந்த நயினை விகாராதிபதி நயினைமக்களோடு சுமார் அரைநூற்றாண்டு காலமாக ஒன்றி வாழ்ந்த பெருந்தகையாளர்.

நயினாதீவு பகுதியில் கடந்த 1986ஆம் ஆண்டு கடற்படையினர் மூர்க்கத்தனமாக பொதுமக்களைத் தாக்கமுட்பட்டசமயம் "என்னைச் சுட்டுக்கொன்றபின் மக்களை கொல்லுங்கள்" என்று தமிழ்ப் பொதுமக்களைக் காத்தவர்,

இவரது வேண்டுகோளின் பேரிலேயே இவரது பூதவுடல் நயினாதீவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில், பெரும்திரளான மக்களும் பங்குபற்றியிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-43 -77)

## இராசி பலன்

22.04.2003
(சித்திரை 9, செவ்வாய்)
சஷ்டி பி.ப 1.15 வரை
பூராடம் பி. இ.12.56 வரை
இராகுகாலம் 3.01 - 4.31
சுபநேரம் 4.31 - 6.01

**மேடம்**
புதிய திட்டமிடல், உடல் உழைப்பு, ஆன்றோர் மதிப்பு, வீண்பயம்

**இடபம்**
எதிர்பாரா்த அச்சம், வீண் தொல்லை, காரிய தடங்கல், தர்மம்

**மிதுனம்**
கௌரவமான நிலை, திடீர் பயம், கலந்துரையாடல், முயற்சி பலிதம்

## தேசிய வீடமைப்பு அதிகாரசபையிடம் வீடுகளைப்பெற விண்ணப்பித்த மக்கள் விசனம்; ஏமாற்றம்

(தென்மராட்சி)

தேசிய வீடமைப்பு அதிகார சபைகு சொந்தமான நாவற்குழி வீடமைப்புத்திட்டத்தில் உள்ள 280 வீடுகளை அதிகாரசபை பொது மக்களுக்கு விற்பனை செய்வதற்கு விண்ணப்பம் கோரியிருக்கும் வேளையில் பல இடம் பெயர்ந்த குடும்பங்கள் தற்போது அங்கே பலவந்தமாக குடியமர்ந்து வருகின்மளவு பணச்செலவும் செய்துள்ளனர்.

இதேவேளை, அதிகார சபைக்கு கிடைத்த விண்ணப்பங்கள தற்போது பாிசலனையில் உள்ளதாகவும், மிக விரைவில் வீடுகளைப் பெறத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு கடிதங்கள் அனுப்படும் என அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

...டமிருந்த ஆணவம் போய்விட்டது. இனிமேல் என்னிடமுள்ள செல்வத்தை நல்ல வழியில் செலவழிப்பேன்" என்று சொன்னார்.

நம்மிடமிருக்கிற பணம் எப்பொழுதும் நம்முடனேயே வந்து கொண்டிருக்காது என்பது இதிலிருந்து புரிகிறது. அதற்காக நாம் பணம் சேர்ப்பதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை, பேசாமல் படுத்துத்தூங்கிக் கொண்டிருந்தால் போதும் என்று இதற்கு அர்த்தம் பண்ணிக் கொள்ளக் கூடாது.

முறையான வழியில் பணம் சேர்க்க வேண்டும். அதை முறையான வழியில் செலவு பண்ண வேண்டும். அதனால் ஏற்படக்கூடிய மன நிறைவு இருக்கிறது பாருங்கள்! அது அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். சொர்க்கத்துக்கு போகிறவர்கள் இங்கேயிருந்து பணத்தை எடுத்துக் கொண்டு போகமுடியாது. ஆனால் நமது செல்வத்தை இங்கே மற்றவர்களுக்குப் பயன்படச்செய்து, அதனால் ஏற்படுகிற புண்ணியம் இருக்கிறது பாருங்கள்... அதை எடுத்துக் கொண்டு போக முடியுமாம், இதுதான் ஆன்மீகவாதிகள் சொல்வது!

ஜோன் நியூட்டன் என்று ஒருவர், அவர், "நான் எப்போதாவது சொர்க்தத்துக்குப் போய்ச் சேர்ந்தேன் என்றால், அங்கே மூன்று அதிசயங்களைப் பார்ப்பேன்" என்று சொன்னார். "என்ன?" என்று கேட்டார்கள்! "நான் யார், யார் இருக்கமாட்டார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேனோ, அவர்களில் சிலர் அங்கேயிருப்பார்கள். அது ஒரு அதிசயம்" என்று சொன்னார். "சரி! அடுத்தது என்ன?" என்றார்கள். "இரண்டாவது அதிசயம் அங்கே இருப்பார்களென்று நான் எதிர்பார்த்த சிலர் அங்கே இருக்கமாட்டார்கள். மூன்றாவது பெரிய ஆச்சரியம் என்ன தெரியுமா?" என்றார் "என்ன?" என்று கேட்டார்கள். நான் அங்கே இருக்கிறேன் பாருங்கள். அதுதான் மூன்றாவது அதிசயம் என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

**இடபம்**
எதிர்பாராத அச்சம், வீண் தொல்லை, காரிய தடங்கல், தர்மம்

**மிதுனம்**
கௌரவமான நிலை, திடீர் பயம், கலந்துரையாடல், முயற்சி பலிதம்

**கடகம்**
சுகவாழ்வு, பகைவரால் நன்மை, காரிய அனுகூலம், நல்லசம்பவம்

**சிங்கம்**
காரிய இடையூறு, தாழ்ந்தசுபாவம், அதிகாரம், போசனசுகம்

**கன்னி**
மாணவர் கல்வியில் ஆர்வம், தன்நம்பிக்கைக்குறைவு, எண்ணங்கள் தாமதமாகும், சிறுவியாதி

**துலாம்**
இனிய சம்பவம், புதிய பொருள் சேர்க்கை, அன்னியர் சந்திப்பு, முயற்சி கைகூடும்

**விருச்சிகம்**
காரிய தாமதம், பொருள் விரயம், சகோதரர் உதவி, திடீர் நன்மை

**தனுசு**
நல்ல முயற்சி, ஜனவசியம், நண்பர்கள் சந்திப்பு, தெய்வ சிந்தை

**மகரம்**
பிதா வழி உறவு, மனக்குழப்பம், நிலைக்கேடு, விருந்துபசாரம்

**கும்பம்**
தொழில்சிந்தை, மனமகிழ்ச்சி, கருமங்கள் கைகூடும், வாக்குப் பலிதம்

**மீனம்**
சுபநிகழ்ச்சி, உற்சாகம், தொழில் நன்மை, காரிய அனுகூலம்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்.**

...நாவற்குழி வீடமைப்புத்திட்டத்தில் உள்ள 280 வீடுகளை அதிகாரசபை பொது மக்களுக்கு விற்பனை செய்வதற்கு விண்ணப்பம் கோரியிருக்கும் வேளையில் பல இடம் பெயர்ந்த குடும்பங்கள் தற்போது அங்கே பலவந தமாக குடியமர்ந்து வருகின்றமை பற்றித் தெரியவருகின்றது.

இதன் பொருட்டு மேற்படி வீடுகளைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்த சுமார் 900பேர் பெரும் விசனமும் அதிருப்தியும் அடைந்துள்ளனர்.

இங்குள்ள மொத்தம் 280 வீடுகள் மூன்றுவகையில் தரப்படுத்தப்பட்டு, விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இந்தவகையில் வீடுகளுக்கு விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பப்படிவம் பதிவு அஞ்சல் போன்றவற்றிற்கு பெரு

இதேவேளை, அதிகார சபைக்கு கிடைத்த விண்ணப்பங்கள தற்போது பாிசலனையில் உள்ளதாகவும், மிக விரைவில் வீடுகளைப் பெறத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு கடிதங்கள் அனுப்படும் என அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது இவ்வாறு இருக்க இவ்வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சில வீடுகளில் இருந்து மரங்கள், கதவுகள் மற்றும் ஓடுகளை இனந்தெரியாதவர்கள் திருடிச் செல்வதாகவும் இதனை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி நாவற்குழி சந்திக்கு அருகில் உள்ள பொது மக்கள் அப்பகுதி கிராமசேவையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (உ-77)

# பாதிக்கப்பட்ட முதியோருக்கு அடிப்படை வசதிகள்

## கஜீபா ஸ்தாபகர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாதிக்கப்பட்ட முதியவர்களுக்கு, உணவு, உடை, மருத்துவம், தங்குமிடவசதி ஆகியவற்றை செயது கொடுக்கவுள்ளதாக கஜீபா நிகழ்ச்சித்திட்ட ஸ்தாபகரும் மாகாணசபை உறுப்பினருமான ஜயந்த சில்வா தெரிவித்துள்ளார்.

பாதிககப்பட்ட முதியோர்களை தெரிவு செய்து அவர்களது வாழ்நாள பூராவும் வேண்டிய உதவிகளை செய்ய பல தனியார் நிறுவனங்களும் முன்வந்துள்ளன.

எனவே இத்தகைய உதவிகளைப பெறவிரும்பும் பாதிக்கப்பட்ட முதியவர்கள் பொறளையில் உள்ள கஜீபா தலைமையகத்தில் விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-10)

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னி செயின்
-குறள்-

# வலம்புரி

## பீரிஸின் பயமுறுத்தல்

சமாதானப் பேச்சுக்கள் குழம்பி விடுதலைப் புலிகள் மீண்டும் போர் தொடுப்பார்களாக இருந்தால் அதனை முறியடிக்க அமெரிக்காவும் இந்தியாவும் இலங்கை அரசுக்கு தாராளமாக உதவி செய்யத் தயாராகவுள்ளன.இவ்வாறு சமாதானப் பேச்சுவார்த்தையில் அரசின் சார்பில் தலைமை தாங்கும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் பௌத்த பிக்குகளின் முன்னிலையில் பேசும் போதே அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.சமாதான முயற்சிகள் தோல்வி கண்டால் அது பெரும் அழிவைத் தரும் எனக் கூறிவந்த அமைச்சர் பீரிஸ் திடீரென புலிகள் மீண்டும் போர் தொடுத்தால் அமெரிக்காவும் இந்தியாவும் அரசுக்கு உதவும் எனக் கூறியிருப்பதன் மூலம் அரசின் சமாதான முயற்சி ஓர் சூழ்ச்சி நோக்கில் நகர்த்தப்படுவது புலனாகிறது.அமெரிக்காவையும்,இந்தியாவையும் மறை முகத்தல் வைத்துக் கொண்டு விடுதலைப் புலிகளையும், தமிழர்களையும் அவர்களது போராட்ட உணர்வுகளையும் மழுங்கடிக்கும் நோக்கில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு திட்டமிட்டு செயற்படுவதையே அமைச்சர் பீரிஸின் உரை கோடிகாட்டியுள்ளது.

நாட்டில் நடைபெறும் இனயுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாயின் சமாதானப் பேச்சு ஒன்றுதான் வழியென அரசியல் மேடைகளில் கூறி வந்த அமைச்சர் பீரிஸ் தனது சமாதானக் கொள்கைகளுக்கு மாறாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா செயற்பட்டு வந்ததாலேயே பொது ஜன ஐக்கிய முன்னணியில் இருந்து விலகிக் கொண்டதாகவும் தெரிவித்திருந்தார்.இதனால்,சமாதானப் பிரியராக அமைச்சர் பீரிஸ் தமிழ்-சிங்கள மக்களினால் அளவீடு செய்யப்பட்டார்.

ஆனால் தற்போது திடீரென தனது சமாதானச் செய்திகளை அமுக்கிவிட்டு விடுதலைப் புலிகளை அச்சுறுத்தும் வகையில் புலிகள் மீண்டும் போர் தொடுத்தால் அமெரிக்காவும் இந்தியாவும் எமக்கு தாராளமாக உதவி செய்யும்.அதற்குச் சான்றாக விடுதலைப் புலிகளின் செயற்பாடு பற்றி இந்தியக் கடற்படை நமக்குத் தகவல் தந்துள்ளது எனவும் பீரிஸ் கூறியுள்ளார்.

சமாதான முயற்சிகள் முன்னேற்றகரமாக நகர்ந்து செல்லும் வேளையில், ஓர் பொறுப்பான அமைச்சர் பௌத்த பிக்குகளின் மத்தியில் விடுதலைப் புலிகளையும்,தமிழர்களையும் அச்சுறுத்தும் வகையில் உரையாற்றியிருப்பது எவ்வகையிலும் பொருத்தமுடையதல்ல.

தனது உரிமைக்காகப் போராடப்புறப்பட்ட இனத்தை,அதன் போராட்ட உணர்வை வார்த்தை ஜாலங்களால் வெருட்டி அடக்கலாம் என அமைச்சர் பீரிஸ் எண்ணுவார் ஆயின் அது அவரின் ஆழ்ந்த அறிவின்மையின் அறிகுறியாகவேயிருக்கும்.

## வடமராட்சி கடற் பிரதேசத்தில்

# இந்திய மீனவர்களின் அத்து மீறல் குறித்து கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதிக்கு நேற்று விஜயம் செய்த கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் வடமராட்சிக் கடலில் இடம் பெறும் இந்திய மீனவர்களன் அத்துமீறல் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்திற்கு நேற்று முற்பகல் விஜயம் செய்த கண்காணிப்புக்குழு யாழ்.அலுவலகத் தலைவர் ஓலே புரண்டம் தலைமையிலான குழு,சமாசத் தலைவர்,செயலாளர் மற்றும் உறுப்பினர்களுடன் வடமராட்சிக் கடலில் இந்திய மீனவர்களின் அத்து மீறல் மற்றும் அதனை தடுக்கும் வழி வகைகள் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

இதேவேளை,கடந்த சில காலமாக வடமராட்சிக் கடலில் அதிகரித்துக் காணப்பட்ட இந்திய மீனவர்களின் அத்துமீறல் மற்றும் அடாவடித்தனங்கள் கடந்த ஒரு வார காலமாகக் மிகவும் குறைந்திருப்பதாக மீனவர் சங்கப் பிரதிநிதிகளால் சுட்டிக் காட்டப்பட்டது. (உ)

## கட்டுத் துவக்கு வெடித்துக் காயம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி உதயநகரில் நேற்று இரவு கட்டுத் துவக்கு வெடித்ததில் ப.கிருஷ்ணகுமார்(வயது21)என்பவர் படுகாயமடைந்து யாழ்.வைத்தியசாலையல் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(ந)

## இந்துமத குருமாருக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள அனைத்து இந்துமத குருமாருக்கான சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை மாலை 6 மணிக்கு ஆனைப்பந்தியில்உள்ள சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்து இந்து மத குருமார்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.(த-3)

## இலங்கையில்

# சர்வதேச பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் சர்வதேச பல்கலைக் கழகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.இத்திட்டத்திற்கான நடவடிக்கைகளை அடுத்த வருடம் முதல் மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாக வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கா தெரிவித்துள்ளார்.இதற்கான முதலீடுகளை செய்வதற்கு பல வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வெளிநாடுகளுக்குச் சென்று உயர் கல்வியைத் தொடர வசதியில்லாத மாணவர்களின் நலன் கருதியே இத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப்படும் பல்கலைக் கழகம் தனியார் துறையான போதிலும் அதில் கல்வி கற்கும் இலங்கை மாணவர்களில் குறிப்பிடத்தக்க ஒரு எண்ணிக்கையானவர்களுக்கு இலவசமாகக் கற்க வசதி செய்து கொடுக்கப்படும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-3)

# தமிழ் மொழிமூல வரலாற்றுப் புத்தகத்தில் 2500 பிழைகள்

## கல்வி அமைச்சர் அறிக்கை

(கொழும்பு)

தேசியற் கல்வி ஆணைக்குழுவில் குறைபாடுகள் காணப்படுமாயின் அதற்கு ஜனாதிபதியே பொறுப்பு என கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் சுஸந்த கம்லத் தேசிய கல்வி ஆணைக்குழு மற்றும் அரச கரும மொழி ஆணையாளர் திணைக்களம் என்பவற்றில் தான் வகித்த பதவிகளை இராஜினாமா செய்ததை அடுத்து, ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கைக்கு விளக்கம் அளிக்கும் வகையில் கல்வி அமைச்சரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு இவ்வாண்டு வழங்கப்பட்டுள்ள பாடப்புத்தகங்கள் கடந்த 1999, 2000 ஆம் ஆண்டுகளில் புதிய கல்வி சீர்திருத்திற்கு அமைய தேசியகல்வி நிறுவகத்தினால் எழுதப்பட்டவை.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியின் போது அச்சிடப்பட்ட இந்தப் பாடப் புத்தகங்களில் காணப்படும் பிழைகள் பற்றி அப்போது கடமையாற்றிய தேசிய கல்வி ஆணைக்குழுவின் செயலாளரிடமே கேட்கவேண்டும் எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்மொழி மூல வரலாற்றுப்புத்தகத்தில் சுமார் 2ஆயிரத்து 500 பிழைகள் இருப்பதாக அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் பாடசாலைப் பாடப்புத்தகங்களில் பிழைகள் இருப்பதாக ஒரு போதும் எழுத்துமூலமோ அன்றி வாய்மூலமோ பேராசிரியர் சுஸந்த கம்லத் அறிவிக்கவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வரலாற்றுப் பாடத்தை மீண்டும் தனியான பாடமாக பாடத்திட்டத்தில உள்ளடக்குவது தொடர்பில் கடந்த வருடம் நவம்பர் மாதம் வரலாற்றுப் பேராசிரியர்களின் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

இதற்கிணங்க தற்போது நடவடிக்கைள் எடுக்கப்பட்டு வருகின்றன. (உ-8)

## வாந்திபேதியால் பாதிக்கப்பட்ட நால்வர் வைத்தியசாலையில் அனுமதி

(திருநெல்வேலி)

பழஞ்சோற்றையும் திருக்கை மீன் கறியையும் உட்கொண்ட இரு சிறுவர் உட்பட நான்கு பேர் வாந்திபேதி காரணமாக மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாவாந்துறை பீச்றோட் பகுதியில் நேற்றுக் காலை இச் சம்பவம் இடம் பெற்றது.இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஒரே குடும்ப உறுப்பினர்களான இராஜதுரை யசோதா (வயது 25),இராஜதுரை யசோதரன் (வயது 18),மற்றும் அவர்களது உறவினர்களான சதீஸ்வரன் கிசாந்தி (வயது 4), திருநாதினேஷ்(வயது8)ஆகிய நால்வருமே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த-43,7)

## பொலிஸ் ஆணைக்குழு பதவி வெற்றிடங்கள் இம்மாத இறுதிக்குள் நிரப்பப்படும்

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவில் நிலவும் பதவி வெற்றிடங்கள் அனைத்தும் இம்மாத இறுதிக்குள் நிரப்பப்படும் என்று ஆணைக்குழுவின தலைவர் ரஞ்அபயசூரிய தெரிவித்தார்.

ஏற்கனவே பொலிஸ் அதிகாரிகள் சிலர் பொலிஸ் ஆணைக் குழுவில் இணைக்கப்பட்டுள்ளதுடன் ஆணைக்குழுவில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு இந்த மாதத்திற்குள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவர் என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை பொலிஸ் உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகளில் இடம் பெறும் அரசியல் தலையீடுகள் குறித்து முறைப்பாடுகள் கிடைத்தால் நேரடியாக விசாரணைகளை மேற் கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (த-3)

## இலங்கையில் பரீட்சார்த்தமாக

# மட்டக்களப்பு மாவட்டத்தில் பெற்றோர் பாடசாலைகள்

(கொழும்பு)

இலங்கையில் முதல் தடவையாக பெற்றோர் பாடசாலை ஒன்று விரைவில் அறிமுகமாகவுள்ளது. முதற்கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 3 கல்விவலயங்களில் இப்பாடசாலைகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் உள்ள பெற்றோர்களிடையே கல்வி தொடர்பாகவும், தமது பிள்ளைகளின் வளர்ச்சியில் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாகவும் விழிப்புணர்சசி ஏற்படுத்துவதே இப்பாடசாலையின் பிரதான நோக்கமாகும்.

கிழக்குப் பல்கலைக்கழக கல்விப் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் எம்செல்வராசா அண்மையில் இஸ்ரேல் சென்று முன்பள்ளிப் பாடசாலை தொடர்பான ஒருமாத காலப்பயிற்சியில் கலந்து கொண்ட போது அங்கு பெற்ற நேரடி அனுபவக் கல்வி மூலமாகவே பெற்றோர் பாடசாலை என்ற எண்ணக்கருவை இலங்கையின் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கின் அனுசரணையுடன் அவர் ஏற்படுத்த திட்டமிட்டுள்ளார்.

இதற்கமைய இப்பாடசாலையில் 14 வயதிற்குட்பட்ட மாணவர்களின் பெற்றோர் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் இவர்களுக்கு வாரத்தில் இரு மணி நேரம் வகுப்புக்கள் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இப்பாடசாலையில் இணையும் பெற்றோர்களுக்கு உணவு முதல் சகல வசதிகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (உ-10)

## தினசரி தியானம்

### கசப்பும் இனிப்பும்

ஆன்மீக ஈடுபாடுகளும், பயிற்சிகளும் கசப்பானவையாகக் காணப்படினும் உண்மையில் அவை இனிப்புச் சுவை உடையன. புலன்களில் ஈடுபாடு கொள்ளல் இனிப்பாகக் காணப்படினும் அவை உண்மையில் கசப்பானவை. இதற்குக் காரணம் அறியாமை காரணமாக அறிவாற்றலில் ஏற்படும் முரண்பாடுதான். அனைவர்க்கும் பொதுவான தீர்க்க முடியாத கடவுளின் செல்வமான தெய்வீக ஒளியுடன் நீங்கள் எப்போதும் பிரகாசித்திருங்கள்.

சுவாமி சிவானந்தர்

## தரம் 09 மாணவர்களுக்கான

# கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப்போட்டி பரிசில்கள்

1ஆம் பரிசு ரூபா 750
2ஆம் பரிசு ரூபா 500
3ஆம் பரிசு ரூபா 250

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

அனுசரணை:
*நீர்வேலி பிரம்மஸ்ரீ கு.தியாகராசசர்மா

### போட்டியின் விதிகள்

தரம் ஒன்பதில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* கட்டுரையின் தலைப்பு : ''தாய் அன்பிற்கு நிகரேது''
* கட்டுரை 175தொடக்கம் 200 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப் பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.05.2003 ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

### இணைக்கும் பத்திரம்

### கட்டுரைப் போட்டி இல-3

மாணவர் முழுப் பெயர் :------------------------------
பாடசாலை :------------------------------
:------------------------------
கற்கும் தரம் :--------------------

உறுதிப்படுத்துகிறேன்

--------------------
ஆசிரியர்

## பிராந்தியத்தில் அரசியல் சம நிலையை பேண

# ஆசிய நாடுகள் புலிகளுடன் நல்லுறவைப் பேண வேண்டும்

## புலிகளின் பிரமுகர் வே.பாலகுமாரன் உரை

(யாழ்ப்பாணம்)

**ஆசியாவில் அரசியல் சமநிலையைப் பேண வேண்டுமாயின் பிராந்திய நாடுகள் விடுதலைப்புலிகளுடன் நல்லுறவைப் பேணுவது அவசியம்.ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட உலக வல்லரசு நாடுகளின் கருத்தும் இதுவாகவே உள்ளது.**

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர் வே.பாலகுமாரன் தெரிவித்தார்.நேற்றைய தினம் யாழ். பல்கலைக் கழகத்தில் இடம் பெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் துணைப் பொறுப்பாளர் சுதா மற்றும் அரசியற்துறை உறுப்பினர் பவான் ஆகியோருடன் நூற்றுக்கணக்கான பல்கலைக் கழக மாணவர்கள் கலந்து கொண்ட இக் கருத்தரங்கில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

கடந்த காலத்தில் ஏற்பட்ட பல் வேறு அரசியல் பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்குண்டிருந்தபோது நாம் சோர்ந்து போய் விடவில்லை.

போரினால் பெற முடியாத அனுகூலங்களை சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் பெற்றுக் கொண்டிருப்பதால் இலங்கை இராணுவமும் சர்வ தேசமும் வியப்படைந்துள்ளன.இதற்கேற்ற வகையிலேயே எமது திட்டமிடல் தந்திரோபாயங்கள் நகர்த்தப்பட்டு வருகின்றன.எமது விடுதலைப போராடடத்தை பயங்கரவாதமாக சித்திரித்த நாடுகள் இன்று கிளிநொச்சிவரை வந்து எம்முடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமளவிற்கு எமது தந்திரோபாயமான செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. இங்கிலாந்து, யப்பான், அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகள் எமக்கு ஆதரவுக் கரம் நீட்டி நிற்கின்றன. இதனால் இந்தியா உட்பட ஆசிய பிராந்திய நாடுகள் இப் பிராந்தியத்தில் அரசியல் சம நிலையைப் பெற வேண்டுமாயின் புலிகளுடன் விரும்பியோ விரும்பாமலோ ஒத்துழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது.

இவவாறாக சர்வதேச ரீதியில் தமிழரின் போராட்டம் விஸ்தீரணம் பெறும் வேளையில் தமிழீழ விடுதலையின் குறியீடாக யாழ்ப்பாணம் திகழ வேண்டும். ஆனால் அதற்கு மாறாக யாழ்ப்பாணம் இராணுவக் குடியிருப்புக் களாகவும் களியாட்டக் களமாக வும் தென்னிலங்கை மக்களின் சந்தையாகவும் தமிழரின் சிறைச் சாலையாகவும் சிங்கள மக்களின் காட்சிச் சாலையாகவும் மாறியுள்ளது.

இந் நிலையில் கட்சி இயக்க வேறுபாடுகள் இன்றி சம காலத்திலேயே தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய சூழ்நிலையில் நாம் தற்போது வாழ்கிறோம். தவறின் மீண்டும் விபரீத விளைவுகள் ஏற்படும்.இதனால் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்தே ஆகவேண்டும்.

எம்மைப் பொறுத்த வரை போரும் சமாதானப் பேச்சுவார்த்தையும் ஒன்றுதான். இந்த சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்திலும் எமக்கென்றொரு படையணியிருப்பதே இன்று அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் ஏன் சந்திரிகா அம்மையாருக்கும் டக்ளஸுக்கும் கூட பெரும் பிரச்சினையாக உள்ளது.தமிழர்களுக்கென்றொரு படையணி இல்லாத வரை தமிழர்களுக்கான,தமிழர் விரும்பும் தீர்வை யாருமே தந்துவிடப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

(த-7)

---

### மூதூரில்......

மலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் உபாலி -தேவகே தெரிவித்துள்ளார். இக்கொலை தொடர்பான விசாரணைகளை திருகோணமலை பொலிசார் மேற்கொண்டுள்ளனர். (ந-5)

---

### புரிந்துணர்வு......

மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெற்ற உயர்மட்ட

---

### பிரி. முன்னாள்......

டி.ஐ.ஜி. தர்மரட்ண மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இப் பேச்சுவார்த்தைகளின்போது அரசும் விடுதலைப்புலிகளும் முன்

---

### சமாதானப்......

யமையினால் ஏற்பட்டதாகும். தற்போது சமாதானத்தின் மீது மக்கள் சந்தேகம்கொள்ளத் தொடங்கியுள்ளனர். இதனால் உடன்படிக்கையில் ஏற்றுக்கொண்டதன் பிரகாரம அரசு தீர்க்கமான தீர்வை காணத தவறியதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையானது, எதிர்வரும் ஜூன மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் சர்வ தேச நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்று முடிவுசெய்துள்ளது.

#### சமாதானத்திற்கு பேராபத்து

தற்போது நடைமுறையிலிருக்கும் சமாதான நடைமுறைகளில் காணப படும் அபாயகரமான சிக்கல்கள் தொடர்பாக எமது இயக்கத்தினால் ஆழமான அதிருப்தியும் கண்டனமும் வெளியிடப்பட்டு பிரதமராகிய தங்களின் கவனத்திற்கு கொண்டு

---

## பாதிக்கப்பட்டோருக்கான நட்ட ஈடு இன்று வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

போரினால் இறந்தவர்கள் மற்றும் ஊனமுற்றோர்களுக்கான இழப்பீட்டுக் காசோலைகளை அகதிகள் புனர்வாழ்வு மீள்குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவால் இன்று பிற்பகல் 2மணியளவில் யாழ்.செயலகத்தில் இடம் பெறும் வைபவத்தில் வைத்து வழங்கப்படும்.

இதில் பாதிக்கப்பட்டவர்கள் 18வயதுக்கு மேற்பட்டவர்களாயின் 50 ஆயிரம் ரூபாவும் 18வயதுக்கு குறைந்தவர்கள் ஆயின 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.இதற்கென புனர்வாழ்வு அமைச்சு 6மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

முனனதாக காலை 9மணிக்கு யாழ்.செயலகத்தில் மாநாடொன்றையும் அமைச்சர் நடத்தவுள்ளார். இதில் நெடுந்தீவு,கோப்பாய், நெல்லியடி,வேலணை, சாவகச்சேரி மற்றும் பச்சிலைப்பள்ளி உள்ளிட்ட 6 பிரதேச சபைகளுக்கும் றான் அமைப்பால் வழங்கப்பட்ட வாகனங்களை மீளப் பெறுவது தொடர்பாகவும் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்படும். (ந-3,7)

---

## இராணுவச் சிப்பாய் காவல்துறையால் கைது

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் நுழைந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புலிகளின் கட்டுபாட்டுப் பகுதியில் உள்ள முல்லைத்தீவில் வைத்தே இவரை தமிழீழ காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பிரஸ்தாப சிப்பாய் தற்போது கிளிநொச்சியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.இவர் அண்மையிலேயே இராணுவத்தில் இணைந்து கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-3)

---

வகையிலான தீர்மானங்களும், பரஸ்பர விவாதங்களுமே வழி வகுக்கின்றன. இதனை நடுநிலையாளர்களின் வழிகாட்டலில் வளர்க்க வேண்டும்.

#### பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வே எமது குறிக்கோள்

சமமானதும் கூட்டு செயற்பாட்டுடனானதுமான அடிப்படை விவகாரங்களுக்கான முக்கிய உப குழுக்கள் இப் பேச்சுக்களின் போது இரு தரப்பிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.முன்னைய பேச்சு அமர்வுகளின் போது இனங்காணப்பட்ட தீர்மானங்களின்படி ஸ்ரீலங்கா அரசும் தமிழீழ

---

## 400 நோயாளர் நேற்று அனுமதி

7வருடங்களுக்குப் பின்னர் நேற்றைய தினம் அதிக அளவான நோயாளர்கள் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை ஆகக் கூடுதலாக 300பேர் வரையிலேயே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் ஆனால் நேற்றைய தினம் 400க்கு மேற்பட்டோர் சிகிச்சைக்காக அனுமதிக்கபட்டதாகத் தெரியவருகின்றது. (ந-3)

---

சர்வதேச சமூகத்துடனான அணுகுமுறையில் எமது அமைப்பை

## புரிந்துணர்வு......

மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெற்ற உயர்மடட கூட்டம் ஒன்றிலேயே அமைச்சர் ஹக்கீம் இதனைத் தெரிவித்துள்ளார். இக் கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர்கள், இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அமைச்சின் அதிகாரி கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ந-5)

## புலிகள்-முஸ்லிம்.....

- அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் சட்டம், ஒழுங்குகளை பாரபட்சம் இன்றி பாதுகாத்துக்கொள்வது பற்றி இரு சாராரும் சட்டம் ஒழுங்கை நிறைவேற்றும் அதிகார பீடத்திடம் ஒருமித்து கேட்டுக்கொள்வது.
- தமிழீழ வீடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை தமிழீழ விடுதலைப்புலிகள் உறுதிசெயவது.
- மேற்குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கு இரு சாராரும் ஒருமித்து எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ளுதல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இச சந்திப்பின்போது விடுதலைப் புலிகளின் சார்பில் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக்கும் முஸ்லிம் தரப்பில எம். ஏ. எம். சௌபிக், அல்காஹ எம். எம். கரீம் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ந-5)

பேச்சுவார்த்தை நடத்தினார்.

இப் பேச்சுவார்த்தைகளின்போது அரசும் விடுதலைப்புலிகளும் முன்னெடுத்துச செல்லும் சமாதான முயற்சிகள், யுத்தநிறுத்த உடன்படிக்கையின் செயற்பாடுகள் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்குப் பிற்பாடு வவுனியா மாவட்டத்தின் தற்போதைய நிலைவரம் தொடர்பாகவும் கலந்துரையாடியதாக படையதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(வ)

## பேச்சுக்களை......

திகதி நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ள சமாதானப் பேச்சவார்த்தை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுளளது. இதில் எவ்வித உண்மையும் இல்லை என சமாதானச் செயலக பணிப்பாளர் பேர்ணாட் குணதிலக தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தையை தாமதப்படுத்துவதற்கான பிரேரணை எதனையும் விடுதலைப்புலிகளோ அன்றி அரசாங்கத்தரப்போ இது வரையும் சமர்ப்பிக்கவில்லை எனவும் நோர்வே அரசாங்கமும் இது குறித்து கருத்து எதனையும் வெளியிடவில்லை எனவும் பேர்ணாட் குணதிலக தெரிவித்துள்ளார்.

இதேவேளை 7ம் சுற்றுப் பேச்சுவார்தையில் கலந்துகொளளவுள்ள அரசதரப்புத் தூதுக் குழுவினரின் பெயர்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. இந்நிலையில் ஊடகங்களில் அறிக்கைகள் வெளியானதில் எவ்வித உண்மையுமில்லை எனவும் பேர்ணாட் குணதிலக மேலும் கூறியுள்ளார். (த-5)

தொடர்பாக எமது இயக்கத்தினால் ஆழமான அதிருப்தியும் கண்டனமும் வெளியிடப்பட்டு பிரதமராகிய தங்களின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டுமென எமது தலைமை பணித்ததற்கு அமைவாகவே தங்களுக்கு இக் கடிதம் அனுப்பிவைக்கப்படுகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக கடந்த ஒரு வருட காலமாக விழிப்புடன் இருக்கிறீர்கள என்பது எமக்குத தெரியும். இந்நிலையில் சமாதானப் பேச்சுகளும் இரு தரப்பினருக்குமிடையே ஆறு சுற்றுக்கள் நடைபெற்ற வந்துள்ளமை உண்மைதான்.

இருந்தபோதும் சமாதானத்திற்கு பேராபத்தை தரக்கூடிய சில வன்முறைச் சம்பவ நிகழ்வுகளால் இவை அவமதிப்பு செய்யப்பட்டுள்ளன.

போர்நிறுத்த உடன்படிக்கையில உறுதியான நிலைப்பாட்டினையும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் பின் சுமுகமான நகர்வுகளையும் தாங்கள் நிச்சயமாக வரவேற்பீர்கள்.எனவே சமாதான வழிமுறைகள் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஓர் நிரந்தர தீர்வினைக் காண்பதற்கு இரு தரப்பினரும் உறுதியான தீர்மானமும்,உடன்பாட்டின் முடிவுமே சமாதானப்பேச்சுக்களும், யுத்த நிறுத்த உடன்படிக்கையும் வெற்றியடைய வழி வகுப்பனவாகும்.

உறுதியான நிலைகளுக்கு பேசசுக்களை முன்னேற்றி நகர்த்துவதற்கும், மனப்பூர்வமான இருதரப்பு உறவுகளைப் பேணுவதற்கும் இருதரப்பு பிரதிநிதிகளுக்கு இடையேயான நம்பிக்கையை கட்டிவளர்ப்பதற்கும் சிறந்த

படுத்தப்பட்டுள்ளது.முன்னைய பேச்சு அமர்வுகளின் போது இனங்காணப்பட்ட தீர்மானங்களின்படி ஸ்ரீலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சர்வதேச சமூகத்துடன் ஒன்றிணைந்து சமாதானத்திற்கான உதவிகளை பேணுவதென்று ஏற்றுக் கொள்ளப்பட்டமை இங்கு குறிப்பிடத் தக்கது.

நவம்பர் மாதம் 25ம் திகதி ஒஸ்லோவில் நடை பெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச நாடுகளின் மாநாட்டில் இத்தகைய கூட்டு முயற்சிகளுக்கான ஓர்எண்ணப்பாட்டொழுங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.விடுதலைப் புலிகள்,வடக்குக் கிழக்குப் போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு புனர்வாழ்வு ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், இயல்பு வாழ்க்கையைக் கட்டி எழுப்பவும் சர்வதேச சமூகத்தின் உதவிகளோடு ஓர் நிரந்தரமான தீர்வைக் காண்பதற்கும் ஸ்ரீலங்கா அரசுடன் முழுக் கூட்டுறவைப் பேண வேண்டும் என்பதில் உண்மையாகவும் அதீத விசுவாசத்துடனும் செயற்பட்டு வருகிறார்கள்.அத்தோடு கூட்டு நிகழ்ச்சித் திட்டங்களிலும் இலங்கை அரசுடன் பரஸ்பரம் கைகோர்த்து ஒன்றிணைக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

### விடுதலைப் புலிகளை அரசு ஓரம் கட்டியது

விடுதலைப் புலிகளினது நன்நடத்தையும்,நம்பிக்கையும் இவ்வாறு சுமுகமாக இருக்க அரசு பொருளாதார உதவிகளுக்கான

துகத தெரியவருகின்றது. (ந-3)

சர்வதேச சமூகத்துடனான அணுகுமுறையில் எமது அமைப்பை ஓரம் கட்டும் முகமாகபுறக்கணித்துள்ளது.

எதிர்வரும் ஜுன் மாதம் யப்பானில் நடை பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச நாடுகளின் கூட்டத்திற்கு தயார்ப்படுத்தலாக இம் மாதம் 14-ம் திகதி வாஷிங்டனில் நடத்தப்பட்ட மிகவும் முக்கியமான முன்னோடி மாநாட்டில் விடுதலைப் புலிகள் தவிர்க்கப்பட்டமையை நாம் சுட்டிக் காட்டுகிறோம், வடக்குக் கிழக்கில் தமிழ்த் தேசிய இனத்தின் பொருளாதார மற்றும் சமுக நலன்களைப் பாதிக்கும் முக்கிய விவகாரங்கள் தொடர்பான விவாதங்களில் இருந்து தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளான எம்மை வாஷிங்டன் மாநாட்டில் புறக்கணித்தமையை நாம் ஆழமாக நோக்குகிறோம்.எமக்கிடையிலான நடுவு நிலையாளர்களான நோர்வேயும் உண்மையான பிரச்சினையை உணர்ந்துள்ளது. இந் நிலையில் சட்டப்பிரச்சினைகள் அற்றதான ஒரு பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்து இருக்கலாம். ஆனால் இந்த அசண்டையீனம் வேண்டும் என்றேசெய்யப்பட்டது என்ற சந்தேகத்தை எமக்கு தோற்றி வித்துள்ளது. எனவே இதன்னத் தெளிவு படுத்தும் பொறுப்பினையும் தங்கள் அரசு செய்யத் தவறி விட்டது என்பதை இங்கு சுட்டிக காட்ட விரும்புகின்றோம் என்றும் அக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.04.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.